Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 085 | வெள்ளிக்கிழமை | மாசி 05 ஆம் நாள் 19 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## ஈழத்துப் பாடகர் சாந்தனுக்கு சிலை

யாழ்ப்பாணம், பெப்.19
ஈழத்தின் புகழ்பூத்த பாடகர் எஸ்.ஜி.சாந்தனுக்கு மாங்குளத்தில் சிலை அமைப்பது என புதுக்குடி 18

# 'பொ – பொ' மக்கள் எழுச்சி: பழிவாங்கும் படலம் ஆரம்பம்

## வாகன இலக்கத்தை வைத்து பருத்தித்துறை இளைஞர் கைது

யாழ்ப்பாணம், பெப்ரவரி 19
தமிழ்பேசும் மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளைக் கண்டித்து நடந்த "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 19

## சலூன் நடத்துபவருக்கு கொரோனா

மன்னார், பெப்.19
மன்னாரில் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்தும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண 19

## தடையை மீறி பங்கேற்ற அனைவர் மீதும் வழக்கு!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திட்டவட்டம்

கொழும்பு, பெப்.19
பேரணி நடத்த நீதிமன்றத் தடை பெறப்பட்ட இடங்களில் பேரணியில் பங்கேற்றவர்கள் மீது வயது வித்தியாசம், தகுதி வேறுபாடு இன்றி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் மீது சட்ட நட 19



## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.19
விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். தொண்டைமானாறு, கெருடாவில் தெற் 18

## "பொ-பொ" மக்கள் எழுச்சி: வாக்குமூலம் பதிதல் தீவிரம்

கிளிநொச்சி, பெப்.19
'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' எழுச்சிப் பேரணியில் பங்குகொண்டமை தொடர்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனிடம் மாங்குளம் பொலிஸார் 19

## வீட்டுக்குள் இரவு புகுந்து ஓட்டோவுக்கு தீ வைப்பு!

### மானிப்பாயில் கும்பல் அட்டகாசம்

யாழ்ப்பாணம், பெப்.19
வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கு தரித்து விடப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. 19

## பா.ஜ.க. கட்சி கிளையை ஆரம்பிக்க விருப்பமாம்!

### கூறுகிறார் மறவன்புலவு சச்சி

யாழ்ப்பாணம், பெப்.19
இலங்கையில் பாரதிய ஜனதா கட்சியின் கிளையை ஆரம்பிக்க இங்குள்ள இந்துத்துவவாதிகள் விரும்புகின்றனர் என்று தெரிவித்துள்ளார் இலங்கை சிவ சேனை அமைப்பின் தலைவர் க.சச்சிதானந் 19

## பொலிஸாருடைய நடவடிக்கைகள் ஜனநாயக வெளியை அதிகரிக்கும்

### மக்கள் பேரெழுச்சி இயக்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.19
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் வருத்தமளிக்கின்றன என்று 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான' மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித் 19

## கடற்படை உல்லாச விடுதிக்கு தமிழ் மக்களின் காணிகளா?

### தடுத்து நிறுத்த திரண்டெழுமாறு மக்கள் பேரியக்கம் அறைகூவல்

யாழ்ப்பாணம், பெப். 19
காரைநகரில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் தமது உல்லாச சுற்றுலா விடுதியை மென்மேலும் விரிவாக்குவதற்காகவும், தமது முகாம்களை நிரந்தரமாக அமைத்துக் கொள்வதற்காகவும் பொதுமக்களின் 50 ஏக்கர் காணியை 19

## திருமணமாகி 3 மாதங்கள்; இளம் பெண் உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி, பெப். 19
திருமணம் செய்த மூன்று மாதங்களில், குடும்ப தகராறு காரணமாக 24 வயது குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். இந்தச் சம்பவம் வரணி, குடமியனில் நேற்று இடம் 19

## கடுமையான கட்டுப்பாடுகளுடன் யாழ்.பல்கலை. பட்டமளிப்பு விழா!

- பட்டம் பெறுபவருக்கு மட்டுமே அனுமதி
- சுகாதார நடைமுறைகள் இறுக்கம்

யாழ்ப்பாணம், பெப்.19
நாட்டில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு, சுகாதாரத் துறையினர் வழங்கும் ஆலோசனைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நடத்தப்படும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கொவிட்-19 தடுப்பு முகாமைத்து வக் குழுவின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுரேந்திரகுமார் தெரிவித்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு நிகழ்வு எதிர் 13

## அரசு திணறும்வரை விட்டுப்பிடிப்போம்!

### ரணில் ஆலோசனை

கொழும்பு, பெப்.19
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு இந்த ஆண்டின் நடுப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள் 19

ஆர்ப்பாட்டங்களுக்கு

# வடக்கு கிழக்கு எம்.பிக்களுக்கு பொலிஸாரின் தடை ஏன்?

சபாநாயகரிடம் மனோ எம்.பி. கேள்வி

**கொழும்பு, பெப். 19**

**“நாட்டின் பல இடங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கு பெறப்படாத தடையுத்தரவுகள், பொத்துவில் பொலிகண்டி பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மாத்திரம் குறிவைத்து பெறப்பட்டுள்ளன. என்னிடம் இது தொடர்பில் பொலிஸார் வாக்குமூலம் பெற்றது ஏன்? இது பற்றி பொலிஸ்மா அதிபரிடம் வினவி எங்களுக்கு அறிவியுங்கள்” என்று நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பாவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

"நான் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்ததையடுத்து எனது செயலாளரைத் தொடர்புகொண்ட சபாநாயகர் அலுவலகம், பொலிஸ்மா அதிபருக்கு இது பற்றிய கடிதம் நாளை (இன்று) அனுப்பப்படும் என தெரிவித்துள்ளது" என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மாத்திரம் பொலிஸார் திட்டமிட்டு, நீதிமன்ற தடையுத்தரவுகளை பெறுகிறார்கள். உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றம் வருவது, அங்கு சபையில் உரையாற்ற மட்டுமல்ல. உண்மையில் அது 25 விகிதம் தான். எமது 75 விகித பணி, என்னை பொறுத்தவரையில், தெருவில், மக்கள் மத்தியில்தான் இருக்கிறது. ஆகவே நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உறுப்பினர்கள் கடமையை செய்யும் சுதந்திரத்தை சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும்.

கொழும்பில் தினசரி ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்போது, பெறப்படாத தடையுத்தரவுகள் ஏன் வடக்கு கிழக்கில் எமது மக்கள் போராட்டங்கள் நடைபெறும்போது மட்டும் பெறப்பட்டு நாடாளுமன்ற உரிமையை மறுக்கும் வண்ணம் பொலிஸார் செயற்படுகின்றனர்? என்பதை பொலிஸ்மா அதிபரிடம் கேட்டு சொல்லுங்கள் என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை தொடர்பில் நான் எழுப்பிய இந்த பிரச்சினைக்கு, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற கட்சி பேதமின்றி ஆதரவு வழங்கினார்கள். தடையுத்தரவு பெறுவது, நீதிமன்றத்துக்கு இழுப்பது, சிறைக்கு அனுப்புவது என்ற சலசலப்புகளுக்கு அஞ்சி ஓடி ஒளியும் அரசியல்வாதி நானில்லை. இன்று இவர்களுக்கு விளக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றதால் இந்தப் பிரச்சினையை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எழுப்பினேன். - என்று குறிப்பிட்டுள்ளார். (த)

பல்கலைகளுக்கு

# மாணவர் அனுமதி

## 10,500 ஆல் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 19

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை வழமையை விட மேலதிகமாக 10 ஆயிரத்து 500 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிதாக 500 விரிவுரையாளர்கள் உள்வாங்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், பல்கலைக்கழகங்களுக்கு இந்த வருடம் இணைத்துக் கொள்ளப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 10 ஆயிரத்து 579 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தமுறை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்காக உப வேந்தர்கள் மற்றும் திறைசேரியின் பங்களிப்புக் கிடைத்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடுத்த மாதத்துக்கு முன்னதாக கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முதற்கட்டத்தின் கீழ் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவபீட மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

# 127 அடி உயரமுடைய

## தாமரை வடிவ புத்தர் கோபுரம்

பிரதமர் திறந்துவைத்தார்



கொழும்பு, பெப். 19

திஸ்ஸமஹாராம, பொல்கஹாவெலன பன்னேகமுவ பகுதியில், 127 அடி உயரம் கொண்ட தாமரை வடிவிலான புத்தர் கோபுரம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச அதனைத் திறந்து வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலை அமைந்துள்ள கோபுரத்தின் உச்சியில் தர்மசக்கர முத்திரையில் 16 அடி நீளமும், 18 அடி நீளமும், 09 அடி அகலமும் கொண்ட சமாதி புத்தர் சிலை உள்ளது. இரத்தினபுரியைச் சேர்ந்த நந்ததேரர் இந்த புத்தர் சிலையை உருவாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# நூதனமாக பணம் பறிப்பு: வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியா, பெப்.19

பணம் தருவதாகக் கூறி நூதனமான முறையில் பொதுமக்களை ஏமாற்றும் சம்பவங்கள் வவுனியாவில் அதிகரித்துள்ளன என்று பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அலைபேசி இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் மர்ம நபர்கள், அவர்களுக்கு அழைப்பு ஏற்படுத்தி அவர்களின் குடும்பச் சூழல் தொடர்பாக விசாரித்து பாசாங்கு செய்கின்றனர். பின்னர் அவர்களுக்குப் பண உதவி செய்வதாகத் தெரிவித்து நம்பவைப்பதுடன் பணம் வழங்க வேண்டுமானால் சிறுதொகைப் பணத்தை 'ஈ.சற்' பணப்பரிவர்த்தனை மூலம் தமது அலைபேசி இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவித்துள்ளனர். பணத்தை அனுப்பிய சற்றுநேரத்தில் உங்களது பணம் வங்கிக் கணக்கில் வைப்பிடப்படும் என்று நம்பவைத்துள்ளனர்.

இதனை நம்பிய பலர் 3ஆயிரம் தொடக்கம் 5ஆயிரம் ரூபா வரையிலான பணத்தை அவர்களுக்கு அனுப்பியுள்ளனர். அதன்பிறகு குறித்த நபர்களின் அலைபேசி இலக்கம் நிறுத்தப்பட்டநிலையில் தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை பின்னரே அவர்கள் உணர்ந்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் வவுனியாவின் கிராமப்புறங்களில் அதிகமாக பதிவாகி வருகின்றநிலையில் பொதுமக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (த-110)

# கொள்ளை, திருட்டில் ஈடுபட்ட ஐவர் நகைகள், பொருள்களுடன் கைது



யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் மாநகரில் மூன்று இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் உட்பட 5 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலமாக 8 தங்கப் பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புத் துறையில் உள்ள வீடொன்றுக்குள் அண்மையில் புகுந்த மூவரங்கிய கும்பல் அங்கு வசித்த வயோதிபர்களை மிரட்டி 8 பவுண் தங்க நகைகள் மற்றும் 2 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டது.

யாழ்ப்பாணம் மருதடி ஒழுங்கையில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தன. அதன் பின்னர், அண்மையில் இரவு வேளை அரியாலை துண்டியில் உள்ள இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவந்தனர்.

தடயங்களின் அடிப்படையில் பாசையூர், குருநகர் மற்றும் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் 23 தொடக்கம் 40. வரையிலான மூவர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் மூவரிடமும் நகை மற்றும் பொருள்களை வாங்கினர் என்ற குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து 8 தங்கப் பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலதிக விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

# தமிழர்களின் உரிமைகளில் சுவிஸுக்குப் பொறுப்புண்டு!

## இந்து மதத் தலைவர்கள் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், பெப்.19**
**தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் சர்வதேசம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றும், அதில் சுவிற்சர்லாந்துக்கும் பொறுப்பு உண்டு என்றும் சுவிற்சர்லாந்து தூதுவரிடம் இந்து மதத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்கலர், நல்லை ஆதினத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். இதன்போது, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் சிவதொண்டன் சுவாமிகள் ஆகியோர் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். சந்திப்பில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக தூதுவர் இந்து மதத் தலைவர்களிடம் கேட்டறிந்தார். தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளையும் கிடைக்க சுவிற்சர்லாந்து ஒத்துழைக்கவேண்டும் என்றும் இந்து மதத் தலைவர்கள் தூதுவரிடம் வலியுறுத்தினர். (வ-இ)

# வீதிகளில் பயணிப்போர் மீது இனந்தெரியாத குழு தாக்குதல்

**நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை**

கிளிநொச்சி, பெப். 19
கிளிநொச்சி நகரத்தை அண்டியுள்ள புறநகர் கிராமங்களின் வீதிகளில் இரவு வேளைகளில் நடமாடும் இனந்தெரியாத இளைஞர் குழுவொன்று, அந்த வீதிகளூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுவோர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு தப்பித்துச் செல்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.
மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களில் வரும் குறித்த குழுவினர் எதிரில் வருவோரைத் தகாத வார்த்தைகளால் ஏசுவதுடன் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். நேற்றுமுன்தினமும் திருநகர் மஞ்சுளா பேக்கரிச் சந்திக்கு அண்மையில் குறித்த இனந்தெரியாத குழுவினர் வாள்வெட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அதே இடத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். எனவே இந்தக் குழு தொடர்பில் பொலிஸார் உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-12)

# பஸ்ஸில் பயணித்தோர் தொடர்புகொள்ளவும்

சாவகச்சேரி,பெப்.19
பூநகரி வழியாக ஏ 32 வீதியில் தனியார் அரச அலுவலர்களுக்கான பஸ்ஸில் (NP JY 6846) பயணித்தவர்கள் தமது பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகருடன் தொடர்புகொண்டு பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை தனங்களப்பு பகுதியில் நடத்திய எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையில் நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஆசிரியை ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் பயணித்த பஸ்ஸின் இலக்கம் நேற்று உதயன் பத்திரிகையில் தவறாக் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பஸ்ஸின் இலக்கமே சரியானது.
எனவே குறித்த பஸ்ஸில் பயணித்தவர்கள் தம்மைத் தாமே சுயதனிமைக்கு உட்படுத்திக்கொள்ளும்படி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

# உகந்தமலை முருகன் ஆலயத்தை உரிமை கோரிய வழக்கு தள்ளுபடி

கொழும்பு, பெப்.19
வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை முருகன் ஆலயத்தை உரிமை கோரித் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன்படி அவ்வாலயம் தொடர்ந்து இந்து ஆகம முறைப்படி தற்போதைய வண்ணக்கர் பரிபாலனசபையுடன் இயங்கவுள்ளது.
கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி இவ்வாலயத்துக்கு தானே உண்மையான உருத்தாளி என மொனராகலையைச் சேர்ந்த ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அத்துடன், ஆலயத்துக்குக் கிடைக்கும் காணிக்கை மற்றும் ஏனைய அன்பளிப்புகள் முறையற்ற விதத்தில் கையாளப்பட்டுள்ளன என்றும், அதற்கு நட்டஈடாக 75 இலட்சம் ரூபாவும், தீர்ப்பு வழங்கப்படும் வரை மாதாந்தம் 2 இலட்சம் ரூபாவும் தமக்குச் செலுத்தப்பட வேண்டும் என பிரதிவாதிக்கு கட்டளையிடவேண்டுமென அவரது மனுவில் கோரப்பட்டிருந்தது. அதற்கு ஆதாரமாக, 1903 இல் எழுதப்பட்டதாகக்கூறப்படும் உறுதியும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கின் விசாரணைகள் பொத்துவில் மாவட்ட நீதிமன்றில் கடந்த ஒருவருட காலமாக நடைபெற்று வந்தது. இந்நிலையில் மாவட்ட நீதிவான் எம்.எச். மொஹமட் ராபி, மனு தாரர் மற்றும் பிரதிவாதி தரப்பினர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத் தரணிகளின் வாதங்களை அவதானித்து இவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டார். (வ-இ)



# விபத்தில் உயிரிழந்த முதியவரின் சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம்,பெப்.19
விபத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பெடுக்குமாறு யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.
கடந்த 15 ஆம் திகதி கண்டி- யாழ்ப்பாணம் பிரதான வீதியின் அரியாலை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்தார். இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். வீதியால் நடந்து சென்ற 67 வயது மதிக்கத்தக்க முதியவரே மோட்டார் சைக்கிள் மோதி காயமுற்று பின்னர் உயிரிழந்தார்.
இந்த முதியவர் தொடர்பான எந்தவித விபரங்களும் தெரியாத நிலையில் குறித்த சடலத்தை அடையாளம் காணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ-25)



# தவறவிட்டோருக்கு அடுத்தவாரம் தடுப்பூசி

கொழும்பு, பெப்.19
கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் பிரதேசங்களில், இதுவரை தடுப்பூசி ஏற்றாத அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, அடுத்தவாரம் தடுப்பூசி செலுத்தப்படும்.
பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார். சில பகுதிகளில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டபோதிலும் மக்களின் பங்களிப்புக் குறைவாகக் காணப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# எதிரணி அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிக்கத் திட்டம்!

***ஓரணியில் திரளுமாறு அனைவருக்கும் சஜித் அழைப்பு***

கொழும்பு,பெப்.19
"அரசின் ஊழல் மற்றும் மோசடிகளை அம்பலப்படுத்தி வெளிப்படையாகவே விமர்சனங்களை முன்வைக்கும் எதிரணி அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிக்கும் 'அரசியல் பழிவாங்கல் வேட்டையில்' தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது. எனவே, அரசின் இந்த முயற்சியை ஜனநாயக வழியில் தோற்கடிப்பதற்கு அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்." இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அறைகூவல் விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்தி விமர்சனங்களை முன்வைக்கும் எதிரணி அரசியல் தலைவர்களை தற்போதைய அரசு குறிவைத்துள்ளது. அவர்களுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் வேட்டையை ஆரம்பித்துள்ளது. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறும், நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அது தொடர்பில் விவாதம் வேண்டும் எனவும் கோரி வருகின்றோம். ஆனால் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதேவேளை, எதிரணி அரசியல் பிரமுகர்களை மௌனிக்க வைப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையை அனைவரும் இணைந்து ஜனநாயக வழியிலும், அரசமைப்பின் பிரகாரமும் தோற்கடிக்க முன்வரவேண்டும்.
கட்சி, பேதங்களுக்கு அப்பால் ஜனநாயகத்துக்காகவும், சிவில் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளவும் ஓரணியில் திரள வேண்டும். இந்த நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பு மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. அதற்கும் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு அரசு முயற்சித்தால் அதனை அனுமதிக்க முடியாது." - என்றார். (க-44)

சிவில் சமூக அமைப்புக்கள்

# மக்கள் நம்பிக்கையை சிதைக்கக் கூடாது!!!

## மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 19**

**மக்கள் எழுச்சியின் வெற்றியை தனி மனித வெற்றியாகக் கற்பனை செய்து புதிய அமைப்புக்களை உருவாக்குதல் மக்கள் மத்தியில் சிவில் சமூக அமைப்புக் குறித்த நல்லெண்ணத்தைச் சிதைத்துவிடும். பொது நோக்கில் இனத்தின் விடுதலையே எமது வெற்றி என்று ஒன்றிணைய வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போரின் பின்னர் தமிழர் தாயகத்தில் பலமான சிவில் அமைப்புக்கள் இல்லை. அவர்கள் அரசியல் சார்பற்று இருக்காமையே அதற்கான காரணம்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை ஒரு மாபெரும் மக்களின் திரட்சியை ஒன்றிணைத்த சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்ந்து அரசியல் கலப்பற்று, அரசியல் பதவிகளை சுயலாபத்துக்காக குறி வைக்காது, ஒரு சில அரசியல்வாதிகளின் எடுபிடிகளாக மாறாது, அரசியல் கட்சிகளின் பின்னால் போகாது, இனத்தின் விடுதலைப் பயணத்துக்குச் சரியான பக்கச் சார்பற்ற வழிகாட்டிகளாகச் செயல் ஆற்றுங்கள்.

இதுவரை சிவில் சமூக அமைப்புக்களது பலத்தை ஒரு சிலர் தவறாக பயன்படுத்தியதன் வெளிப்பாடே மக்கள் சிவில் சமூக அமைப்புக்களின் மீது நம்பிக்கை இழந்தமையாகும்.

தற்போது உள்ள வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் நேர்த்தியான செயற்பாடுகளை முன்னெடுத்து இனத்தின் விடுதலைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள்.

உங்களுக்கு பாதுகாப்பாக சகல சக்திகளும் இருக்கும். தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை வழி நடத்துபவர்களாகவும், தடம் மாறும் அரசியல்வாதிகளை மக்களுக்கு இனம் காட்டுபவர்களாகவும் உங்கள் செயற்பாடுகள் அமைய வேண்டும் - என்றார். (ஓ.20)

# யானைக் கூட்டத்தால் தென்னைகள் துவம்சம்

## ஒரே இரவில் மூங்கிலாறில் சம்பவம்

முல்லைத்தீவு, பெப்.19

மூங்கிலாறு தெற்கு பகுதியில் கிராமமொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் மக்களின் வாழ்வாதார பயிர்களை நாசம் செய்துள்ளன. 23 தென்னை மரங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன், வயல் நிலங்களும் நாசமாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; காட்டுயானைகளால் எமது வாழ்வாதாரப் பயிர்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன. உடையார் கட்டுக்குளத்தின் மேற்புற காட்டுப் பகுதியில் நிற்கும் காட்டுயானைகள் தற்போது நெற்பயிர் அறுவடை முடிவுறும் தறுவாயில் காட்டில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள எமது கிராமங்களுக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன. யானைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். முன்னர் யானைவேலி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் அது கைவிடப்பட்டுள்ளது. காட்டு கரையோரத்தில் உள்ள பயிர்களை அழித்த யானைகள் தற்போது கிராமத்துக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன - என்றனர். (ப-19)

# பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 8 பேர் சந்தேகத்தில் கைது

கிளிநொச்சி, பெப். 19

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்று முன்தினம் 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புன்னைநீராவியடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும், குமாரசாமிபுரம் பகுதியில் கசிப்பை விற்பனை செய்ய வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும், புளியம்பொக்கணைப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 டிப்பர்களுடன் அதன் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி ஹேரத் தெரிவித்தார். (ஓ.113)

# திருப்பாடுகளின் நாடக ஆற்றுகைக்கான பிரதி

யாழ்ப்பாணம்,பெப்.19

திருமறைக் கலாமன்றத்தின் வருடாந்த செயற்பாடுகளில், முதலிடம் பெறுகின்ற திருப்பாடுகளின் நாடக ஆற்றுகைக்கான பிரதி வழங்கும் நிகழ்வு, கிறிஸ்தவர்களின் தவக் காலத்தின் ஆரம்ப நாளாகிய நேற்று முன்தினம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் இடம்பெற்றது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு பா.யோ.ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். அத்துடன் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்களுக்கான பிரதிகளையும் வழங்கிச் சிறப்பித்தார். இந்த ஆண்டு 'களங்கம்' என்னும் தலைப்பிலான நாடகமே மேடையேற்றப்படவுள்ளது. (க)



சர்வதேச ரீதியில் செயற்பட்டு வரும் 41 கிளப் ஒப் ரவுண்ட் ரேபிள், ரன் கென்ட் கிளப்பால் (41 club of round table,tangent club) நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. சமூக சேவையாளர் கோ.ஜீவபாலன் கற்றல் உபகரணங்களை வழங்கினார். (க)



# வெடிபொருள் மீட்பு; சந்தேகநபரும் கைது


வவுனியா,பெப்.19

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் 25 கிலோ சி4 வெடிமருந்துகள் நேற்று மீட்கப்பட்டன.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஒன்றிணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின் போதே, இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவத்தில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கண்ணிவெடி அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றில் கடமையாற்றியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-110)



# கொரோனா தடுப்பூசி; மக்களுக்கு விழிப்பூட்டல்

சாவகச்சேரி,பெப்.19

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில், கொரோனாத் தடுப்பூசி தொடர்பாக விழிப்புணர்வு பிரசாரமும், துண்டுப் பிரசுர விநியோகமும் இன்று முதல் மேற்கொள்ளப்படவுள்ளன. இன்று 19ஆம் திகதி மந்துவில் பிரிவிலும், நாளை 20 ஆம் திகதி கொடிகாமம் பிரிவிலும், மறுநாள் 21 ஆம் திகதி வரணி மற்றும் மட்டுவில் பிரிவுகளிலும்,22 ஆம் திகதி நாவற்குழி பிரிவிலும், 23 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பிரிவிலும், 24 ஆம் திகதி கைதடி பிரிவிலும், 25 ஆம் திகதி, சாவகச்சேரி பிரிவிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-9)

# த.ம.மகா வித்தியில் நுழைவாயில் திறப்பு

வவுனியா,பெப்.19

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தின் மூன்றாவது நுழைவாயில் நேற்றுத் திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன், வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன், பழைய மாணவர் சங்க இணைத்தலைவர் ப.தயாபரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். இதற்கான நிதியில் ஒரு பகுதி பழைய மாணவ தாய்ச் சங்கத்தினராலும், எஞ்சிய பகுதி 98 ஆம் ஆண்டு அணியினராலும் வழங்கப்பட்டது.

இன்று முதல் பெற்றோர்கள் இரண்டாவது நுழைவாயிலூடாக பாடசாலைக்குள் வருகை தந்து, மூன்றாவது வாயிலூடாக வெளியேற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## என்ன சொல்லப் போகிறது ஜெனிவா?

ஜெனிவா ஐ.நா. சபையின் மனித உரிமைக்கான கூட்டம் ஆரம்பமாக இன்னும் ஒரு வாரகாலமே உள்ளது. இந்த நிலையில் அங்கு இலங்கை தொடர்பான விவகாரம் கடும் விவாதத்துக்குரிய பேசு பொருளாக இருக்கும் என சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் ஜெனிவாவில் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச பொறிமுறை எதனையும் ஏற்றுக்கொள்வதில்லை என்ற தீர்க்கமான முடிவை ராஜபக்ச அரசு எடுத்துள்ளது . இது ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தும் விடயமல்ல.

ராஜபக்சக்களின் புதிய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின்னர் அரச நிர்வாகக் கட்டமைப்பிலும் , சர்வதேச இராஜதந்திர உறவுகளில் கையாளப்படும் உத்தி முறைகளிலும் , வேக ,வேகமாக மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள் யாவும், ஆட்சிப்பீடத்தவரின் ஜனநாயக முலாம் பூசப்பட்ட சர்வாதிகாரப் போக்கினை வெளிப்படையாக இனம் காட்டியுள்ள நிலையில், இலங்கை மீதான அயலக, அமெரிக்க மற்றும் மேற்குலகின் சுய நலத்துடன் கூடியதான ஆதரவுப் போக்கு, சந்தேகப் பார்வையாக மாறத் தொடங்கிவிட்டது.

உலகின் மேலாதிக்க சக்தியாக தன்னை நிலைப்படுத்த அதிதீவிர முனைப்பு காட்டிவரும் சீனாவுடனான இலங்கையின் எதிர்பார்ப்புடன் கூடிய , அத்தியந்தமான ஒட்டுறவு நெருக்கம் மேற்கு நாடுகளுக்கு மட்டுமல்லாது இந்தியாவின் கண்ணையும் உறுத்தவே செய்கின்றது. இந்து சமுத்திரப் பகுதி மற்றும் தென்னாசியப் பிராந்தியம் மீதான தமது அரசியல் அபிலாஷைகளை தக்க வைத்துக் கொள்வதற்கு அல்லது விஸ்தரித்துக் கொள்வதற்கு ஏற்ற புவி சார் அரசியல் சூழலில், சீனாவுடனான இலங்கையின் நெருக்கம் பாதுகாப்பானதல்ல என்ற அச்சம் இந்தியாவுக்கு உண்டு. அதே அச்சம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கும் இருக்கவே செய்கின்றது. இதனாலேயே, சீனா இருக்கும் தைரியத்தில் இலங்கை வெளிப்படுத்திவரும் திமிறலை, கட்டுக்குள் கொண்டுவர ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வினை ஒரு மஞ்சு விரட்டுக் களமாக பயன்படுத்த இந்தியா,அமெரிக்கா மற்றும் அவற்றின் ஆதரவு நாடுகள் முனைந்ததில் வியப்பில்லை.

இந்த ஆடுகளத்தில் நடக்கப் போகும் நீயா, நானா மோதலின் முடிவில் தமிழ் மக்களின் கடந்த ஒரு தசாப்தகால மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏதாவது நியாயமான உறுதியான தீர்வு கிடைக்குமா என 'நம்பிக்கையற்ற' நம்பிக்கைகளுடன் பலரும் எதிர்பார்த்திருப்பதும் நிஜமே!

நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆங்கே பொசியக் கூடும் என்பதைப் போன்ற எதிர்பார்ப்பாகவே அது இருக்கிறது.எதிர் பார்ப்பதும் ஏமாறுவதும் தமிழ் மக்களுக்கு புதிய அனுபவமேயல்ல. தமிழர் வரலாற்று தொடர் கதையின் அத்தியாயங்கள் அனைத்தும் இதனையே பதிவு செய்துள்ளன.


இதே சமயம் ஜெனிவா அமர்வுக்கு முன்னரே இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை எந்தப் பின்புல பலத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தி , தன் பக்க ஆதரவைத் திரட்டும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.இந்தச் சமயத்தில் அறிக்கை வடிவில் ஒரு இடி இலங்கை அரசாங்கத்தின் தலையில் இறங்கியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை நேற்றைய தினம் வெளியிட்டுள்ள ஆகப்பிந்திய அறிக்கையொன்றில் "புதிய உடையுடனும், மாறு வேஷத்துடனும் தன்னை வெளிப்படுத்த முனையும் பழைய பிசாசு" என இலங்கையை குறிப்பிட்டுள்ளது. அத்துடன் "அச்சத்தரும் சூழ்நிலைக்கு மீண்டும் திரும்பியது இலங்கை "இந்த அறிக்கையில் கடினமான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.இதன் மூலம் மறைமுகமாக ஒரு செய்தியை மன்னிப்புச்சபையானது, இலங்கைக்கும், சர்வதேச சமூகத்துக்கும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் சொல்லாமல் சொல்லி நிற்கின்றது. இவ்வாறு எச்சரிக்கும் விடயம் படித்துவிட்டுக் கடந்து போகக்கூடியது அல்ல என்பதையும், அது மிகக் கனதியானது என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொண்டு ,நியாயம் காக்க வேண்டியது காலவிதியாகும்.

மனித உரிமைப் பேரவைக்கு சர்வதேச மனிப்புச்சபையின் இந்த அறிக்கை – இலங்கைக்கு எதிரான விவாதத்தின் போது ஒரு ஆவணச் சான்றாக இருக்கும் . ஆயினும் ஜெனிவாவில் ஐ.நா.வின் அரசியல் நகர்வு இதனை எவ்வாறு கணக்கிலெடுக்கப் போகிறது என்பதே கேள்வி.

இந்தக் கேள்விக்கு அமர்வின் முடிவில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை முன்வைக்கும் தீர்விலேயே அதன் மீதான உலகெங்கும் அடக்கி ஒடுக்கப்படும், உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் போராடும் மக்களின் நம்பிக்கை தங்கியுள்ளது என்பதே யதார்த்தம்.

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# செம்மூக்கன் முதலைகளால் உயிராபத்து ஏற்படும் அபாயம்

## பதுங்கியிருந்து வேட்டையாடுகின்றன என்று துணுக்காய் மக்கள் அச்சம்

**முல்லைத்தீவு, பெப்.19**

**துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட கல்விளான்குளம் பாலியாற்றில் செம்மூக்கன் முதலைகள் குடிகொண்டுள்ளதால் நீர் அருந்தச்செல்லும் கால்நடைகள் உட்பட மனித உயிருக்கும் பெரும் ஆபத்து உள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

காலபோக நெல் அறுவடை முற்றுப்பெறாத நிலையில் கால்நடைகளை மேய்ச்சலுக்காக பாலியாற்றுக்கு மேலேயுள்ள காட்டுப்பகுதியில் இருக்கும் புல்வெளிகளுக்கே கொண்டுசெல்கின்றோம். கடந்த வருட இறுதியில் பெய்து தீர்த்த கனமழை காரணமாக வவுனிக்குளம் வான்பாய்ந்தபோது அதற்குள்ளிருந்து வெளியேறிய செம்மூக்கன் முதலைகள் எமது ஆற்றுப்பகுதியில் குடிகொண்டுள்ளன. நாங்கள் மீள்குடியேறியபோது 5 அடி ஆழமாகவும் சுமார் 15அடி அகலமாகவும் இருந்த ஆற்றின் அளவு இப்போது மணல் அகழ்வு காரணமாக 10 அடிக்குமேல் ஆழமாகவும் 30அடிக்கு மேல் அகலமாகவும் மாறியுள்ளது. மணல் அகழ்வின்மூலம் ஏற்பட்டுள்ள குழிகளிலேயே அந்த முதலைகள் குடிகொண்டுள்ளன. இவ்வாறு பதுங்கியிருக்கும் அவை கால்நடைகளை பிடித்து இரையாக்குகின்றன. கடந்தவருடம் டிசெம்பர் மாதம் தொடக்கம் இப்போது வரை எமது கிராமத்தில் 12 மாடுகளை செம்மூக்கன் முதலைகள் பிடித்துள்ளன. பெரிய மாடுகளையே பிடிக்கும் இந்தவகை முதலைகளால் மனிதர்களுக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கால்நடைகளையும் எமது உயிர்களையும் பாதுகாக்கும் பொருட்டு அப்பகுதியில் குடிகொண்டுள்ள முதலைகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் ஆற்றைக் கடந்து செல்வதற்கு பாலம் அமைத்து தரவேண்டும்-என்றனர். (ஐ-12)

## நான்கு மாதக் குழந்தை கொரோனாவால் சாவு

கொழும்பு,பெப்.19

பேராதனை, பண்டாரநாயக்க குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நான்கு மாதப் பெண் குழந்தை ஒன்று கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி குறித்த குழந்தைக்கு 4 மாதத்தின்போது போடும் ஊசி போடப்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் பண்டாரநாயக்க குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் குழந்தைக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி நுகவெல பகுதியைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-இ)

## பொதுமக்கள் அனைவரும் வார இறுதி விடுமுறையில் அவதானமாக இருக்கவும்

*பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு*

பொதுமக்கள் வார இறுதி விடுமுறை காலத்தில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வார இறுதி விடுமுறை நாள்களில் சுற்றுலா, வைபவங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றுகூடல் போன்ற விடயங்கள் பரவலாக நடைபெறக் கூடும். எனவே சுகாதாரப் பிரிவினர் வகுத்துள்ள சுகாதார பரிந்துரைகளுக்கமைய அனைவரும் செயற்பட வேண்டும். பிரிட்டனில் புதிய கொரோனாத் தொற்று உருவாகியுள்ள நிலையில், இத்தொற்று நாட்டில் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-இ)



## கிளி. விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இலவச கணினி பயிற்சி நிலையம்

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டைளையின் இலவச கணினி பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட பீடாதிபதி அ.அற்புதராஜா மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் ஆகியோர் இப் பயிற்சி நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து மாணவர்களிடம் கையளித்துள்ளனர்.

லண்டன் ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிதி அனுசரணையில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையால் கிளிநொச்சி கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் திறக்கப்பட்டுள்ள இந்த நிலையம் மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சிகளை வழங்கவுள்ளது.

நிகழ்வில் ஆங்கில பாட உதவிப் பணிப்பாளர் சுதர்சன், பொறியியற்பீட விரிவுரையாளர் கலாநிதி கதிர்காமநாதன், கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் உறுப்பினர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். (ந-214)

# ஊழியர்களின் போராட்டத்தால் களேபரமானது சபை அமர்வு!!

வவுனியா,பெப்.19

**தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து வவுனியா நகரசபை ஊழியர்கள் சிலர் முன்னெடுத்து வரும் போராட்டத்தால், நேற்று இடம் பெற்ற சபை அமர்வு களேபரமானது.**



வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கௌதமன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இறம்பைக்குளம் வட்டார உறுப்பினர் சலிஸ்டன், போராட்டம் மேற்கொள்ளும் ஊழியர்களை வேலையால் நிறுத்தியமை அநியாயமான செயற்பாடு. நகரசபை வாயிலில் போராட்டம் மேற்கொள்வதால், சபைக்கே இழுக்கு. எனவே குறித்த ஊழியர்களின் போராட்டத்துக்கு ஒரு தீர்வை வழங்குமாறு கோரினார்.

இதன்போது உறுப்பினர் மோகன், அரசியல் கட்சிகளுடன் இணைந்து இவ்வாறான போராட்டங்களை அந்த ஊழியர்கள் முன்னெடுத்து வருகின்றனர். தேவையில்லாமல் சபை நிர்வாகத்துடன் முரண்பட்டு, அவர்களது பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளனர். என்றார். அவர்களது அணுகுமுறைகள் பிழையாக இருந்தமையாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்துடனோ அல்லது சிரேஸ்ட உறுப்பினர்களிடமோ வந்து பேசாமல், சபைக்கு இழுக்கை ஏற்படுத்தவே இப்படியான போராட்டங்களைச் செய்கின்றனர் என்று பல உறுப்பினர்களும் குற்றம் சுமத்தினர்.

இதன்போது தவிசாளர் கௌதமன், இவர்களது கோரிக்கைகள் ஒவ்வொரு நாளும் மாற்றப்படுகின்றன. சபைக்கு எதிராகவும் உறுப்பினர்களுக்கெதிராகவும், முறையற்ற துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து அனைவருக்கும் அவமானத்தை ஏற்படுத்துகின்றனர். இது நீதியற்ற ஒரு போராட்டம் என்றார். இதனால் உறுப்பினர் சலிஸ்டனும் தவிசாளரும் கடுமையாக முரண்பட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சபையின் செயலாளர் இ.தயாபரன், சட்டத்துக்குட்பட்டே நாம் அவர்களைப் பணியிலிருந்து நீக்கியுள்ளோம். இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். தற்போது அவர்களுக்கான விசாரணை இடம்பெறும். அவர்கள்மீது 7 குற்றசாட்டுக்கள் எங்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை தாம் செய்யவில்லை என்று நிரூபித்தால் மீண்டும் வேலை வழங்க முடியும்.

இதேவேளை ஏற்கனவே பணியிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த நான்கு ஊழியர்களை மனிதாபிமான அடிப்படையில் மீண்டும் பணிக்குச் சேர்த்திருந்தோம் - என்றார்.

குறித்த விடயம் தொடர்பாக சபையில் நீண்ட விவாதம் இடம்பெற்றது. உறுப்பினர் சலிஸ்டன், சிரேஷ்ட உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகனுடன் அவர்களது பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி, தீர்வைப் பெறும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று அமர்வில் தீர்மானிக்கப்பட்டது. (க-110)

### வவுனியா நகரத்தின்

## கழிவகற்றல் செயற்பாடுகளை தனியாருக்கு வழங்கத் திட்டம்

வவுனியா,பெப்.19

வவுனியா நகர வட்டாரத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளின் கழிவகற்றல் செயற்பாடுகளைத் தனியாருக்கு வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வவுனியா நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது நகரத்தில் கழிவகற்றும் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பாக உறுப்பினர்களால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் பரதலிங்கம், நகரத்தின் கழிவகற்றல் செயற்பாட்டைத் தனியாரிடம் ஒப்படைத்தால், அவர்கள் சீரான முறையில் அதனை மேற்கொள்வார்கள். எனவே அது தொடர்பாக பரிசீலிக்குமாறு தெரிவித்தார்.

சபை தீர்மானம் எடுத்தால் அதனைச் செய்யமுடியும். அதற்கான மதீப்பீட்டு அறிக்கை தொடர்பாக அடுத்த சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்று செயலாளர் பதிலளித்தார். (க-110)



தென்னைப் பயிர்ச்செய்கை சபை மற்றும் தேசிய தமிழர் சக்தி ஆகியவை இணைந்து, யாழ்ப்பாணம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினர். (க-20)

## குத்துச்சண்டை பாசறை : மாணவர்கள் கௌரவிப்பு

வவுனியா, பெப்.19

வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் வடக்கு மாகாண ரீதியாக நடைபெற்ற 'பிரேஞ் சவாட் கிக் பொக்சிங்' பயிற்சிப் பாசறையில் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்ற இராசேந்திரன் குளம் அ.த.க.பாடசாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் எஸ்.சண்முகரெட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை பிரெஞ் சவாட் அமைப்பின் தலைவர் சீ.பூ. விக்கிரமசிங்க வளவாளராகக் கலந்துகொண்டிருந்த இக் குத்துச்சண்டைப் பயிற்சிப் பாசறையில், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும், தரப்படுத்தல் பட்டியையும் வடக்கு மாகாண பிரேஞ் சவாட் கிக் பொக்சிங் அமைப்பின் தலைவரும், வடக்கு மாகாண தலைமை பயிற்றுவிப்பாளருமான எஸ்.நந்தகுமார் வழங்கினார். பாடசாலை ஆசிரியை ஜெயந்தி விநாயகமூர்த்தியின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப் பயிற்சிப் பாசறையில் பங்கு பற்றிய ஒன்பது வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பயிற்சியை வழங்கிய பயிற்றுவிப்பாளர் எஸ்.சஞ்சயன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ந-110)



# கிளி. ஆடைத் தொழிற்சாலை விடயத்தில் சுகாதாரத் துறையினரின் கவனம் தேவை

### பச்சிலைப்பள்ளி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும், ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் சுகாதாரத் துறையினர் இந்த விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உலகெங்கும் தற்போது பரவி வரும் கொரோனாத் தொற்றால் பல நாடுகள் அச்சத்தில் உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர் ஒருவருக்கு கடந்த சில தினங்களுக்கு முன் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். அதன் பின்னர் மேலும் பலருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்ற குறித்த தொழிற்சாலையில் வெளிமாவட்டங்களில் இருந்தும் பணிக்கு வருகின்ற உயர் பணியாளர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரையில் இந்த ஆடைத் தொழிற்சாலையானது சுகாதார நடைமுறைகளை பின்பற்று கிறதா என்பது கேள்விக் குறியாக உள் ளது. அத்துடன் போரால் பாதிக்கப்பட்டு வறுமையின் நிமித்தம் வேலைக்கு வருகை தரும் ஊழியர்கள் பற்றி எவரும் அக்கறைகொள்ளவில்லை- என்றார். (ஐ-6)

## சுகாதார ஊழியர்களுக்கு வடக்கில் அநீதி இழைப்பு

*இலங்கை பொதுச் சுகாதார சேவைகள் சங்கம் சுகாதார சுதேச மருத்துவ அமைச்சுக்கு கடிதம்*

மன்னார், பெப்.19

வட மாகாணத்தில் இலங்கை பொதுச் சுகாதார சேவைகள் சங்கத்தின் அங்கத்தவர்களான சுகாதார ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார சேவைகள் சங்கத்தின் வடமாகாண தலைவர் எஸ்.எச்.எம்.இல்ஹாம் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் கடமைபுரியும் இலங்கை பொதுச் சுகாதார சேவைகள் சங்கத்தின் அங்கத்தவர்களான சுகாதார ஊழியர்களுக்கு கைவிரல் அடையாள இயந்திர பதிவு மற்றும் தை மாத மேலதிக கொடுப்பனவு தொடர்பில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கைவிரல் அடையாள இயந்திர பாவனை சம்பந்தமாக வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரால் முன்னர் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபங்களின் பிரகாரம் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் கடமையாற்றும் வைத்தியர்கள் தவிர்ந்த அனைத்து ஊழியர்களும் கைவிரல் அச்சு இயந்திரம் பாவிக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அதனை மாற்றி வைத்தியர்கள், தாதியர்கள் துணை மருத்துவ சேவையாளர்கள் தவிர்ந்த அனைவரும் கைவிரல் அச்சு இயந்திரம் பயன்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறு பயன்படுத்தினாலேயே அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தசெயற்பாடானது சுகாதாரத்துறையில் எம்மை ஓர வஞ்சனையான விதத்தில் நடத்த முனைவதாக நாங்கள் உணர்கின்றோம்.

ஆகவே இதற்கான நல்ல தீர்வு கிடைக்கப்பெறாவிடில் வட மாகாணம் முழுவதும் எங்களுக்கு நீதியான தீர்வு கிடைக்கும் வரை தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதைத் தங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-56)

## ஒட்டுசுட்டான் கிராமங்களுக்கு பேருந்துச் சேவைகள் வேண்டும்

*பொது அமைப்புக்கள் வலியுறுத்து*

முல்லைத்தீவு, பெப். 19

மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு ஆகிய கிராமங்களுக்கு கூடுதலான பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என அந்தப் பகுதி பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

காலை வேளையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், முத்துஐயன்கட்டுப் பகுதியில் உள்ள பாடசாலைகள் ஆகியவற்றுக்காகச் செல்கின்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் பேருந்துக்காகக் காத்திருந்து, சேவையில் ஈடுபடுகின்ற ஒரு சில பேருந்துகளில் நெரிசல்பட்டுப் பயணித்து பணியிடங்களுக்குச் செல்ல வேண்டி உள்ளது. குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பெரியகுளம், ஒதியமலை ஆகிய கிராமங்களுக்கு பேருந்துச் சேவைகள் நடத்தப்பட வேண்டும். ஒதியமலை போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது போக்குவரத்துப் பிரச்சினை முதன்மைப் பிரச்சி னையாக ஆசிரியர்களால் சுட்டிக் காட்டப்படும் நிலையில் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் நலன்கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மாங்குளத்தில் இருந்து கூடுதலாக பணி யில் ஈடுபட வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.


(ப-13)

# பதுங்குகுழிகள், மண்அணைகளை முல்லையில் அகற்றி உதவுக

பொது அமைப்புகள் கோரிக்கை

**முல்லைத்தீவு, பெப்.19**

**இறுதிப் போர் நடைபெற்ற முல்லைத்தீவின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள பதுங்கு குழிகள் மற்றும் மண் அணைகளை முழுமையாக அகற்றுமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**



2009ஆம் ஆண்டில் தமது கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்திருந்த நிலையில், எறிகணை வீச்சுகளில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக பொதுமக்கள் அமைத்த பதுங்கு குழிகள் முழுமையாக இதுவரை அகற்றப்படவில்லை. இப்பதுங்கு குழிகளில் காட்டு விலங்குகளும் பாம்புகளும் நுளம்பு களின் பெருக்கமும் நிறைந்து காணப்படுகின்றது. தற்போது மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இவை அச்சுறுத்தலாக மாறி உள்ளன.

அகற்றப்படாத மண் அணைகளால் பல இடங்களில் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. மண் அணைகளை அகற்றுவதன் மூலம் மழை வெள்ளம் வடிந்தோடக்கூடிய நிலைமை உள்ளது. மீள் குடியேற்றத் தொடக்கத்தில் பதுங்கு குழிகள் அழிப்பு மற்றும் மண் அணைகள் அகற்றல் என்பவை இடம்பெற்றன. எனினும் அவை முழுமை பெறவில்லை. இவற்றை கருத்திற்கொண்டு இப் பகுதிகளின் மக்களின் நலன்கருதி, இங்கு காணப்படும் பதுங்கு குழிகளையும் மண் அணைகளையும் அகற்றித் தருமாறு இப்பகுதி பொது அமைப்புகள் மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

(ந-13)

## மாந்தையில் அடாத்தாக காணிகள் அபகரிப்பு!

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் குற்றச்சாட்டு

மன்னார், பெப்.19

மாந்தைப் பிரதேசத்தில் காணிகள் அத்துமீறி அபகரிக்கப்படுகின்றன என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர் என்று அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று மன்னார் அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாயம், கல்வி, குளங்கள் புனரமைப்பு, வனவளத் திணைக்களத்தினர் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கின்றமை, தனியார் அடாத்தாக காணிகளை அபகரிக்கின்றமை மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இளைஞர்களுக்கான விளையாட்டு மைதானங்களுக்கான கோரிக்கை, அமைப்புகளால் விடுக்கப்பட்ட போது, இளைஞர்களின் நன்மை கருதி அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக விளை யாட்டுகளுக்கு முன்னு ரிமை வழங்கப்படும். எனவே முதலில் விளையாட்டு மைதானங்களை அடையாளப்படுத்துங்கள்.

அதன் பின்னர் அந்த இடம் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் கதைத்து விளையாட்டு மைதானத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று காதர் மஸ்தான் மேலும் தெரிவித்தார்.

(ற-213)

## கட்டளையை மீறவில்லை: எனினும் பொலிஸாரால் விசாரணை

முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.19

பொத்துவில் தொடக்கம், பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொள்ள நீதிமன்றத்தால் கட்டளை வழங்கப்பட்ட பின்னரும், நான் பேரணியில் கலந்து கொண்டேன் என்று மட்டக்களப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள் என்னிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்த மட்டக்களப்பு பொலிஸ் பிரி வைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர், முல்லைத்தீவு மாவட்டத்தின், மாங்குளம் பொலிஸ் பிரிவால் கடந்த 6ஆம் திகதியன்று எனக்கு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டு நீதிமன்றக்கட்டளை வழங்கப்பட்டது எனவும், ஆனால் நான் அதனையும் மீறி அந்தப் பேரணியில் கலந்துகொண்ட ஒளிப்பதிவுகள் தங்களிடம் உள்ளன எனக்கூறியும் என்னிடம் வாக்கு மூலம் கோரினர். மாங்குளம் பொலிஸார் மாங்குளம் புகையிரதக் கடவையை அண்மித்ததாக வைத்து நான் மட்டுமே வந்த எனது வாகனத்தை மறித்து அந்த நீதிமன்றக் கட்ட ளையை வழங்கினார்கள். அதனை வழங்கியதன் பின், நீதிமன்றத்தின் கௌரவத் தன்மையை மதித்து, எனது பெயர் அக்கட்டளைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்படா விடினும்கூட தொடர்ந்து அப்பேரணியில் செல்வதை நிறுத்தி க் கொண்டு நான் மட்டக்களப்புக்கு திரும்பி விட்டேன்" என்பதை அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தேன் - என்றார்.

(ப)


## வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு

- Graphic Designer
- Web Designer
- Type Writer
- எழுதுவினைஞர்
- கணினி இயக்குனர்
- கணக்காளர்

ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. O/L, A/L சித்தியடைந்தவர்கள் 22.02.2021 பிற்பகல் 2.30 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேர்முகத் தேர்விற்கு நேரில் சமூகமளிக்கவும்.

**தொடர்புகளுக்கு: 077 168 6895, 077 922 9842**

# மேம்பாலம் கோரும் முல்லை. மக்கள்



முல்லைத்தீவு, பெப். 19
முல்லைத்தீவு தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்றுமாறு அம்பலப்பெருமாள்குளம் மற்றும் கோட்டைகட்டியகுளம் கிராம மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்துக்கு சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தை நடத்துவதற்கு வருகை தந்த துணுக்காய் பிரதேச செயலர் தலைமையிலான அதிகாரிகளிடமே இக்கோரிக்கை கடந்த 16ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மழைக் காலங்களில் கோட்டை கட்டியகுளம் வான் பாய்கின்ற காலத்தில் தாழ்பாலப் பகுதியில் அதனூடான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படுகின்றன. இந்நிலையில் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் செல்ல முடியாத நிலைமை ஏற்படுகின்றது எனவும் குறித்த கிராம மக்கள் தெரிவித்தனர்.

'கடந்த 10 ஆண்டுகளாக தாழ் பாலத்தை மேம்பாலமாக மாற்றுமாறு தாம் விடுத்த கோரிக்கைகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டன' என்பதையும் அவர்கள் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினர். (ஒ.13)

# வயல் நிலங்களுக்கு தீ மூட்ட வேண்டாம்

## அதிகாரிகள் அறிவுறுத்து

முல்லைத்தீவு, பெப்.19

**காலபோக அறுவடை முடிந்ததைத் தொடர்ந்து, வயல் நிலங்களில் தீ மூட்ட வேண்டாம் என்று அதிகாரிகள் அறிவுறுத்தி வரு கின்றனர்.**

மாவட்ட மட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இக் கூட்டங்களில் கலந்துகொள்கின்ற அதிகாரிகள் "வயல் நிலங்களில் அறுவடைக்குப் பின்னர் தீ மூட்ட வேண்டாம். அவ்வாறு தீ மூட்டினால் மானிய உரம் வழங்கப்படமாட்டாது. வயல்களுக்கு தீ மூட்டாமல் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதன் மூலம் வயல் நிலங்களுக்கு இயற்கை உரம் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. கால்நடைகளுக்கும் உணவு வசதி ஏற்படும். ஆனால் விவசாயிகள் அறுவடை முடிந்தவுடனேயே வயல் நிலங்களுக்கு விவசாயிகள் தீ மூட்டுகின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவ்வாறு தீ மூட்டுகின்ற விவசாயிகளுக்கு மானிய உரங்களை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை" எனக் கூறி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுகளான வவுனிக்குளம், முத்.தையன்கட்டுக்குளம் ஆகிய பிரிவுகளின் கீழான குளங்களுக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-13)



## மன்னாரில் பயனாளிகளுக்கு 3 வீடுகள் கையளிப்பு!

மன்னார், பெப்.19
மன்னார் - மடுப் பிரதேசத்தில் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' என்னும் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட மூன்று வீடுகள் நேற்றுமுன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் பயனாளிகளுக்கு இந்த வீடுகள் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட, மடு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தற்சணமருதமடு, இரணை இலுப்பைக்குளம், கங்காணிகுளம் ஆகிய பகுதிகளில் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரனும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ரு-213)

### வவுனிக்குளத்தின் கீழான

## வயல்களுக்கான நீர் விநியோகம் தொடரும்

முல்லைத்தீவு, பெப். 19
வவுனிக்குளத்தின் கீழான வயல்நிலப் பகுதிகளில் புழுதி விதைப்புக்கான நிலச் சூழல் இல்லாததன் காரணமாக சேற்று விதைப்பே கூடுதலாக இடம் பெறுகின்றது. சேற்று விதைப்புக்கான நீர் விநியோகம் இன்னும் ஒன்றரை மாதங்கள் தொடரும். இவ்வாறு வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலே காலபோக நெற்செய்கையை நிறைவு செய்வதற்கு வவுனிக்குளத்தின் கீழ் ஒன்றரை மாதம் வரையான காலப்பகுதி அதிகமாக ஏன் தேவைப்படுகின்றது என்று கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய குளங்களின்கீழ்புழுதி விதைப்புகள் இடம்பெற்று மூன்றரை மாத காலங்களில் அறுவடைகள் முடிந்து விடும். ஆனால் வவுனிக்குளத்தின் கீழ் இன்னும் ஒன்றரை மாதங்கள் நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வவுனிக்குளத்தின் கீழான வயல் நிலங்களில் புழுதி விதைப்புக்கான சூழல் இல்லை என்பதே இதற்குப் பிரதான காரணம். மழை பெய்ததன் பின்னர்தான் விதைப்புகள் இடம்பெறும். ஏனைய இடங்களில் அறுவடைகள் நிறைவடைந்தாலும், வவுனிக்குளத்துக்கு ஒன்றரை மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது - என்றார். (ஒ-13)

## நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு வள்ளங்கள் வழங்கி வைப்பு

முல்லைத்தீவு, பெப். 19
முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை மேம்படுத்தும் நோக்கில், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனவ சங்கங்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக தென்னியன் குளம், அம்பலப்பெருமாள் குளம், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய கிராமங்களில் செயற்படும் நன்னீர் மீனவ சங்கங்களுக்கு 39 வள்ளங்கள் வழங்கப்பட்டன.

ஐயன்கன் குளம் மற்றும் தென்னியன் குளச்சங்கங்களுக்கு தலா 10 வள்ளங்களும், அம்பலப்பெருமாள் குளம் மற்றும் கோட்டைகட்டிய குளம் சங்கங்களுக்கு தலா 5 வள்ளங்களும், தேறாங்கண்டல் சங்கத்துக்கு 9 வள்ளங்களுமாக மொத்தமாக 39 வள்ளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட வள்ளங்கள் ஒன்றின் பெறுமதி 68 ஆயிரத்து 615 ரூபாவாகும். (ஒ.19)

# மடு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மக்கள் பிரச்சினைகள் பல ஆராய்வு

மன்னார், பெப்.19
மடு பிரதேச செயலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம், மடு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஜி.வினோஜிதாவின் நெறிப்படுத்தலின்கீழ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மடு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



மேற்படி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், வீட்டுத்திட்டம், சமுர்த்தி விடயம் உட்பட அவை சார்ந்த பிரச்சனைகள், நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல், மின்சாரம், வன விலங்கு, காடழிப்பு, பிரதேச செயலக பணிகள் மற்றும் மக்களின் தொடர் பிரச்சினையாக உருவெடுத்துள்ள காணி சம்பந்தமான விடயங்களுடன் இணைந்த பொது அமைப்புக்களின் பல்வேறு பிரச்சினைகள் ஆகியன தொடர்பில் கவனத்தில்கொள்ளப்பட்டது. அத்துடன், சுகாதாரம், உள்ளூராட்சி மன்றங்கள், விவசாயம், விலங்கு உற்பத்தி, கல்வி மற்றும் பிரதேசவாரியாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் பரஞ்சோதி, பிரதேச சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ரு-213)

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் இலங்கையில் அதிகரிப்பு!

### அவதானமாக இருக்குமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 19



இலங்கையில் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்கின்றன என்று பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார். 16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளைகள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகமாகப் பதிவாகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக பெண் பிள்ளைகள் பாடசாலை, மேலதிக வகுப்பு மற்றும் வெளிக்களச் செயற்பாடுகளுக்காகச் செல்லும்போது, பெற்றோர் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்தினார். (ம-22)

# மக்களுக்கு சென்றடைய வேண்டியவற்றால் அதிகாரிகள் சட்டைப் பைகளை நிரப்பக்கூடாது

### யாழ். மாநகர முதல்வர் அன்புக் கட்டளை

யாழ்ப்பாணம், பெப். 19

**சபைக்கு வருமானம் தரும் வழிமூலங்களைத் தடுக்காதீர்கள், செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். நீங்கள் செய்கின்ற சேவைகள் மக்கள் சேவைகளாக மக்களைச் சென்றடைந்தால் அது பிழை அல்ல. ஆனால் அது உங்களது சட்டைப் பைகளை நிரப்பினாலே அது பிழை. பிரச்சினையான விடயம்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார். யாழ். மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாக யாழ். மாநகர சபையின் கிளைத் தலைவர்களுக்கும், மாநகர முதல்வருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தரப்பட்ட ஒரு வேலையைச்செய்து முடிக்காமல் அதற்கான காரணத்தை மற்றவர்கள் மேல் தட்டி விடுகின்ற சாதாரண பணியாளர்களாக இல்லாமல் தரப்படும் பொறுப்பைச் செய்து முடிக்கின்ற ஆளுமை மிக்க பணியாளர்களாக இருக்க வேண்டும். அத்துடன் உங்களுக்கு கீழ் உள்ள பணியாளர்களை குற்றம் சொல்லாமல் அவர்களையும் ஆளுமைமிக்க, அர்ப்பணிப்புமிக்க பணியாளர்களாக மாற்றுவதில் தான் உங்களுடைய ஆளுமையும் தங்கியுள்ளது. நான் அரச தாபனக் கோவைகளை அறியாதவன். அது தொடர்பாக எனக்குத் தெரியாதவற்றை நீங்கள் கற்றுத் தாருங்கள். நான் அதனைக் கற்றுக்கொள்ளத் தயாராக உள்ளேன்.

மாநகரத்தில் ஏதாவது ஒரு செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு நான் முயன்றால் அதனை தாபன விதிகளுக்கு ஏற்றவகையில் எவ்வாறு செய்யலாம் என்று கூறுகின்ற அரச அதிகாரிகளாக நீங்கள் இருக்க வேண்டுமே தவிர, அந்தச் செயற்பாட்டைச் செய்யவே முடியாது என்று முற்றாக மறுக்கின்ற அரச அதிகாரிகளாக இருக்க வேண்டாம். குறித்த விடயம் உங்களுக்கு சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதைத் தெரிந்தும் நான் உங்களை அதற்குள் தள்ளமாட்டேன். அவ்வாறு ஏதவாது பிரச்சினை வந்தால் நான் ஒரு சட்டத்தரணியாக உங்களைப் பாதுகாப்பேன்.

அத்துடன்நான் முதல்வராக இருக்கப் போகின்ற இந்த ஒரு வருடம் மட்டுமன்றி நான் முதல்வராக இல்லாத காலத்திலும் உங்களுக்காக உங்களைப் பாதுகாக்க நீதிமன்றம் வருவேன்.

உங்களைப் பாதுகாப்பேன் என்ற உத்தரவாதத்தை இங்கு ஒரு சட்டத்தரணியாக வழங்குகின்றேன்- என்றார் (ய-20)



## தரம் 6 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி, பெப்.19

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கனடா ஒன்றியத்தினர் கடந்த வருடமும், இவ் வருடமும் தரம் ஆறு வகுப்புகளில் இணைந்துள்ள 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் சப்பாத்துக்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கினர்.

பாடசாலை அதிபர் கே.இரவீந்திரா தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ந-9)

## கால்கோள் விழா



குடமியன் அ.த.க பாடசாலையின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த திங்கட்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஜீ.சந்திரகுமார், விக்கினேஸ்வரா முன்பள்ளி ஆசிரியர்களான திருமதி.கி.சுஜிகரன், திருமதி.பா.தாஸ்மோகன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (க-159)

## மாணவர்களை ஒன்றுகூட்டும் நிகழ்வுகளுக்குத் தடைவிதிப்பு!

கொழும்பு, பெப்.19

பாடசாலை வளாகத்துக்கு வெளியில், அதிக அளவு மாணவர்களை ஒன்றுகூட்டி நடைபவனி, வாகனப் பேரணி மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநபர்களைச் சந்திக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் நடத்தப்படக்கூடிய விவாதப்போட்டி, பேச்சுப்போட்டி, மரநடுகை நிகழ்வு ஆகியவற்றின் போது சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

மாணவர்களின் திறமைகளைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில், அதிக அளவானோரை ஒன்றிணைக்காது நடத்தப்படும் நிகழ்வுகள் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக நடத்தப்படும் உத்தியோகபூர்வ அரச நிகழ்வுகளின்போதும் சமூக இடைவெளியைப் பேணி, சுகாதார ஒழுங்கு விதிகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ற-இ)

## திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இலங்கையிடம் மீளக் கையளிக்க இந்தியா இணக்கம்

### அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை இலங்கையிடம் மீளக் கையளிப்பதற்கு இந்தியா இணக்கம் வெளியிட்டுள்ளது என பெற்றோலிய வளத்துறை அமைச்சரும் அரசின் பேச்சாளருமான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். எண்ணெய்க் குதங்களை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் நடைபெற்ற பேச்சு வெற்றிகரமாக நிறைவு பெற்றது என கொலன்னாவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சின்போது, 2017ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் புறந்தள்ளி, தாம் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியத் தூதுவர் இணக்கம் வெளியிட்டிருந்தார் எனவும் அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

இதன்படி மிக விரைவில் எண்ணெய்க் குதங்கள் இலங்கை வசமாகும் எனவும், அவற்றைப் பெற்றுக்கொண்டதும், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அவற்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்போம் எனவும் அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (ம-22)

காணிப் பிரச்சனை:

## தாக்குதலில் காயமடைந்த பெண் மருத்துவமனையில்

கொடிகாமம், பெப்.19

நீண்ட நாள் காணிப் பிரச்சினை காரணமாக வீடு புகுந்து அயல்வீட்டு நபர் தாக்கியதில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு மந்துவில் மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த இந்திரசேகரன் தயாளினி (வயது-27) என்பவரே காயமடைந்தவராவார். (ந-159)

ஐ.நா அமர்வில்

# சீனாவின் ஆதரவை திரட்டவே மூன்று தீவுகள் ஒப்படைப்பு

கஜேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, பெப். 19


**மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் எதிர்வரவுள்ள நிலையில், சீனாவுக்கு இடம் கொடுத்து ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கின் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு ஆகிய மூன்று தீவுகள் சீனாவின் மின்சார திட்டம் ஒன்றுக்காக ஒப்படைக்கப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது. இந்த நடவடிக்கையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முழுமையாக எதிர்க்கின்றோம். தமிழர்களின் தேசத்தில் தமிழர்களின் சம்மதம் இல்லாமல் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இதற்கு அப்பால் இந்தியா எங்களின் அயல்நாடு. இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக இந்தியாவின் எதிரியாக இருக்கக்கூடிய சீனாவை இந்தியாவின் கோடிக்குள் கொண்டுவந்து நுழைப்பது என்பது இந்தியாவின் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக் கும் செயற்பாடு.

இது தேவையில்லாத பிரச்சினையை வலிந்து வரவழைக்கும் ஒரு செயற்பாடாகவும் அமைந்துள்ளது. இந்தியாவின் நலன்களுக்கு மாறாக இலங்கை அரசு இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதை உடனடியாக நிறுத்திக்கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர் எதிர்வரவிருக்கும் நேரத்தில் இந்தியாவுடனான ஒரு புரிந்துணர்வுக்குச் செல்வதைத் தவிர்த்து, மாறாக சீனாவுக்கு இடம் கொடுப்பதன் மூலமாக சீனாவின் ஊடாக தனக்குரிய ஆதரவைத் திரட்டிக் கொள்ளமுடியும் என்கின்ற நம்பிக்கையில் இலங்கை அரசு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இது இலங்கைக்கு எதிர்காலத்தில் பெரும் ஆபத்தாக முடியும்- என்றார். (ப-19)



## அனைவரும் தடுப்பூசியை ஏற்ற முன்வரவேண்டும்

*பருத்தித்துறை சுகாதார பரிசோதகர் தெரிவிப்பு*

பருத்தித்துறை,பெப்.19

“பொருளாதாரத்தையும், கல்வியையும் கட்டியெழுப்பி நாளாந்த இயல்பு வாழ்க்கையை மகிழ்வுடன் மேற்கொள்ள அனைவரும் கொரோனாத் தடுப்பூசியை ஏற்ற முன்வரவேண்டும்” என்று பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

பருத்தித்துறை கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கான கொவிட் தடுப்பு மருந்தேற்றல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசியை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. எந்தவிதமான நோய் நிலைகள் உள்ளவர்களும்,வயது முதிர்ந்தவர்களும் பயமின்றி இதனை ஏற்றிக்கொள்ளமுடியும்.

தடுப்பசி ஏற்றிய பின்னர், ஊசிபோட்ட இடத்தில் நோவு,சாதாரண காய்ச்சல்,தசை நோவு போன்ற பக்கவிளைவுகள் ஏற்படலாம். இவை கூட எமது உடல் சரியாக தொழிற்படுகின்றது எனக் காட்டும் நல்ல அறிகுறிகளே.

எனவே தவறான, எழுந்தமானமான கருத்துக்களை நம்புவதைத் தவிர்த்து, சரியான விடயங்களை சமூகமட்டத்தில் எடுத்துச்சொல்வதன் மூலம் மக்கள் தடுப்புமருந்தேற்றலை 70 வீதத்துக்கு அதிகமாகப் பெற பாடுபடவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும் என்றார். (ஐ-9)

## பருத்தித்துறையில் 21 பேர் தனிமையில்

பருத்தித்துறை,பெப்.19

பருத்தித்துறை நெல்லண்டை பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களுடன் பழகிய நான்கு வீடுகளைச் சேர்ந்த 21 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். திருகோணமலையிலிருந்து பருத்தித்துறை நெல்லண்டையிலுள்ள உறவினர் வீட்டுக்கு வந்து தங்கிச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரில் இருவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய 21 பேர் தனிமைப்படுத்தப் பட்டனர். (ஐ-9)

## முழு நேரச் சட்டத்தரணியே மாநகர சபைக்குத் தேவை

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முழுநேரமாக பணியாற்றக்கூடிய சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு உறுப்பினர்கள் ஏகமனதாக ஆதரவு வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. சபையின் சட்டத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சட்டத்தரணி ஒருவர் தேவைப்படுகிறார் என தகவல் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

கடந்த காலங்களில் பகுதி நேர சட்டத்தரணிகளாக இருந்தவர்கள், மாநகர சபை சார்ந்த அனைத்து வழக்குகளிலும் முன்னிலையாக வில்லை. எனவே முழு நேரமாகப் பணியாற்றக் கூடிய சட்டத்தரணியொருவரையே நியமிக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. முன்னைய பகுதி நேர சட்டத்தரணி பெற்றுக்கொண்ட சம்பளத் தொகையே இப்போது சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மேயர் வி.மணிவண்ணன் குறிப்பிட்டார். (ஒ.319)


## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.19

ஹெரோய்ன்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது திருநெல்வேலி பால்பண்ணைப் பகுதியில் வைத்து இவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 600 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-25)



## கடலாமையுடன் ஒருவர் கைது

ஊர்காவற்றுறை,பெப்.19

கடலாமையை இறைச்சியாக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வேலணை செட்டிபுலம் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சிவில் உடையில் சென்ற பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்தனர். சந்தேகநபரிடமிருந்து 20 கிலோ நிறையுடைய கட லாமை கைப்பற்றப்பட்டது. சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-25)

## கஞ்சாவுடன் மூவர் கைது

நாவற்குழி,பெப்.19

நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 50 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன்,அவர்களை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-25)

## 12 குடும்பங்களுக்கு பி.சி.ஆர்.

சாவகச்சேரி,பெப்.19

நாவற்குழிப் பகுதியில் உள்ள ஆசிரியை யொருத்தருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து, அந்தப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 12 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேருக்கு நேற்று பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனையில் பேருந்தில் பயணித்த ஆசிரியைக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஆசிரியையுடன் தொடர்பு பேணியதாகக் கருதப்பட்ட அயலில் உள்ள 12 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு நேற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (க-9)

# உடல்கள் கட்டாய தகனம் என்பது அரசுக்கு எதிரான மற்றுமொரு பிடி

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 19**

**கட்டாயத் தகனம் குறித்த விடயத்தில் இலங்கை அரசு அக்கறை கொள்ளாதது, இலங்கை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கான மற்றுமொரு ஆதாரம் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வாறு உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும், அரசாங்கம் உயிரிழக்கும் முஸ்லிம்களது உடல்களை வலுக்கட்டாயமாக தகனம் செய்து வருகிறது. நிபுணர் குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்தே முடிவை அறிவிக்க முடியும் எனக் கூறி தற்போது பின்வாங்குகிறது. உலக சுகாதார அமைப்பு, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்ய அனுமதித்துள்ளபோதிலும் இலங்கை அரசின் குறித்த முடிவை ஐ.நா. மனித உரிமை வல்லுநர்களும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்களும் கண்டித்துள்ளன. ஜெனிவா அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினரான பாகிஸ்தானின் ஆதரவைப் பெற இலங்கை ஆர்வமாக உள்ளது. இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் புதிய தீர்மானத்தை பேரவை பரிசீலிக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கட்டாய தகனம் குறித்த விடயத்தில் அரசாங்கம் அக்கறை கொள்ளாதது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கான மற்றுமொரு ஆதாரம் என்றார். (ப)

# 1,012 கிலோ மஞ்சள் புத்தளத்தில் மீட்பு!



கொழும்பு, பெப்.19

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சுமார் ஆயிரத்து 12 கிலோகிராம் மஞ்சள் புத்தளத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, புத்தளம் மன்னார் வீதியின் இரண்டாம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள உப்பளமொன்றில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 11 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த நிலையில், இந்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட மஞ்சள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)




# 112 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

கொழும்பு, பெப்.19

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சிய முனையம் வரையான நிலத்தடி எண்ணெய் குழாய் அமைப்பருகே சட்டவிரோதமாக குடியேறி வசித்துவரும் 112 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் கொலன்னாவ இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவற்றின் தலையீட்டுடன் ரூபா 500 மில்லியன் செலவில் இப்புதிய வீடுகள் அமைத்து வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ந)

# இந்தியா - இலங்கை உறவில் விரிசல்

## நாட்டுக்கு பாதிப்பு என்கிறது ஐ.தே.க.

கொழும்பு. பெப்.19

தற்போதைய அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. இது எதிர்காலத்தில் இலங்கையை மோசமாகப் பாதிக்கக் கூடும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக, இந்தியாவுடனான நல்லுறவு சிதைவடைந்துவிட்டது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற பிராந்திய நட்பு நாடுகளுடன் இலங்கை தொடர்ந்து நல்லுறவுடன் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-இ)

## ஜனாஸா விவகாரம்

# இலங்கையின் செயல் ஏமாற்றம் அளிக்கிறது

## அமெரிக்கா கவலை

கொழும்பு, பெப்.19

கொரோனாவால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதாக அறிவித்துவிட்டு அதிலிருந்து அரசாங்கம் பின்வாங்கியமை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் இந்த விடயம் தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்யும் கொள்கையை முடிவுக்கு கொண்டு வருவதிலிருந்து அரசாங்கமும் பிரதமரும் பின்வாங்குவது ஏமாற்றமளிக்கின்றது. அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் உள்பட பொதுமக்களுக்கு ஜனநாயக அரசாங்கத்திடமிருந்து அவர்களின் உரிமைகளுக்கான கௌரவம் வழங்கப்படவேண்டும் என அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். (வ-இ)

# அமைச்சர்களின் குடும்பத்துக்கு திருட்டுத்தனமாகத் தடுப்பூசிகள்

## ஹேஷா விதானகே குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

அமைச்சர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு திருட்டுத்தனமாகக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி வழங்கும் போர்வையில் இவ்வாறு அமைச்சர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் கடைசிக் குடிமகனுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் வரை நான் தடுப்பூசி செலுத்திக்கொள்ள போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கொரோனா தடுப்பூசி ஏற்றினாலும் சுகாதார விதிமுறைகள் கட்டாயம்!

## சுகாதார அமைச்சின் முக்கியஸ்தர் தேஷானி ஹேரத் வலியுறுத்து

கொழும்பு, பெப்.19

கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும், சுகாதாரப் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு மையத்தின் ஊடகப்பிரிவு அதிகாரியான மருத்துவர் தேஷானி ஹேரத் நேற்றுத் தெரிவித்தார்.

கொவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு, கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லையா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தடுப்பூசியைப் பெற்றதும் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன என நினைக்கக் கூடாது. தடுப்பூசி போட்டுக்கொள்ளும் அதேவேளை இதுவரை கடைப்பிடித்த சுகாதாரப் பழக்கவழக்கங்களைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும். குறிப்பாக சமூக இடைவெளி பேணுதல் முகக்கவசம் அணிதல், கைகளைச் சுத்தமாகக் கழுவுதல் போன்றவற்றைச் செய்ய வேண்டும். கொவிட்19 தடுப்பூசியை ஏற்றினால் எதிர்காலத்தில் எவருக்கும் வைரஸ் தொற்று ஏற்படாது என்பது இன்னமும் பரிசோதனை மூலம் உறுதிசெய்யப்படவில்லை. நடவடிக்கைகள் ஆய்வு மட்டத்திலேயே உள்ளன. ஆனாலும் வைரஸ் தொற்றினால்கூட பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளலாம். எனவே, இதனை சாதகமானதாகப் பார்க்க வேண்டும் -என்றார். (ற-44)



## யாழ்ப்பாணச் சந்தைகளில்
# விவசாயப் பொருள்களை கொட்டி நிறை அளவீடு
### மாவட்டச் செயலர் அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், பெப். 19**



**யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான சந்தைகளில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது அவற்றைப் பொதிகளிலிருந்து அகற்றி அவற்றின் தரத்துக்கு ஏற்ப நிறை அளவீடு செய்யுமாறு மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், சந்தைகளில் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு 10 சதவீத விவசாயக் கழிவு அறவிடப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்குத் தீர்வாக தம்புள்ள மரக்கறி நிலையத்தைப் போன்று பொருள்களைக் கொட்டி அவற்றின் தரத்தின் அடிப்படையில் நிறைகளை அளவீடு செய்து கொடுப்பனவை வழங்கும் நடைமுறையை யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துமாறு கோரியே யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், சந்தை வியாபாரிகள் மற்றும் குத்தகைக்காரர்களுடன் கலந்துரையாடி இதனை நடைமுறைப்படுத்துமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ.5)

## தடுப்பூசி யாரெல்லாம் போடக்கூடாது?
### மருத்துவர் ஹேரத் விளக்கம்

கொழும்பு, பெப். 19

கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும், 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கும் கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றக் கூடாது என்று சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு மையத்தின் ஊடகப்பிரிவு அதிகாரியான மருத்துவர் தேஷானி ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் பொதுமக்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றும்பணி இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் எந்தெந்த தரப்புக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றக் கூடாது, அல்லது அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

18 வயதுக்கு குறைந்தவர்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றக் கூடாது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் பின்னர் அப்பிரிவினருக்கும் அனுமதி வழங்கப்படலாம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கும் தடுப்பூசி ஏற்றக் கூடாது. அதேபோல பாலூட்டும் தாயாக இருந்தால் குழந்தை பிறந்து 6 மாதங்கள்வரை தடுப்பூசி பெற்றுக்கொள்ள கூடாது. ஏனெனில் இப்பிரிவினர் குறித்தும் இன்னும் ஆய்வு இடம்பெறவில்லை. 6 மாதங்களுக்கு பிறகே தடுப்பூசியை பெறுவதற்கு தகுதிபெறுவர். அதிகளவு ஒவ்வாமை இருப்பவர்கள் தவிர்த்துக்கொள்வதே நல்லது.

தடுப்பூசி 2 கட்டங்களாக ஏற்றப்படும். முதற்சுற்றில் தடுப்பூசி ஏற்றப்பட்டு, அதனால் அதிக அளவு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அவர் இரண்டாவது டோஸைப் பெறக்கூடாது.

கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் சிகிச்சை நிலையங்களில் இருப்பவர்கள் தடுப்பூசியை பெற முடியாது. குணமடைந்து இரு வாரங்களின் பின்னர் பெற்றுக்கொள்ளலாம், என்றார்.

அதேவேளை, தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் சுகாதார ரீதியிலான அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என சிலர் கருதுகின்றனரே என எழுப்பட்ட கேள்விக்கு, நானும் தடுப்பூசி ஏற்றிக்கொண்டேன். நலமாக இருக்கின்றேன். தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு சிற்சில உபாதைகள் ஏற்படக்கூடும். ஊசி ஏற்றப்படும் இடம் சிவப்பு நிறமாகலாம், அந்த இடத்தில் வலி ஏற்படலாம். சிலவேளை சிறு அளவில் காய்ச்சல் ஏற்படக்கூடும். நடுக்கம் ஏற்படலாம். சிலருக்கு உணவு அருந்த முடியாது, வாந்தியும் வரக்கூடும். ஆனால், இரு நாள்களில் இயல்பு நிலைக்கு வந்துவிடும். எனினும், தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கு அச்சப்படத் தேவையில்லை. நீங்கள் விரும்பினால் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்ற கருத்தும் சிலர் மத்தியில் நிலவுகின்றது. குறிப்பாக தடுப்பூசியை பெற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் கர்ப்பம் தரிக்க முடியாது என பெண்கள் சிலர் கருதுகின்றனர். கர்ப்பமடைந்தாலும் கரு கலைந்துவிடலாம் என சிலர் கருதுகின்றனர். அவ்வாறு எதுவும் இல்லை. எனவே, சுகாதாரத் தரப்பினரிடம் ஆலோசனை பெற்று, மருத்துவரிடம் பிரச்சினைகளை எடுத்துரைத்த பின்னர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம். எவராவது கர்ப்பம் தரிக்க விரும்பினால் 3 மாதங்களுக்கு முன்னர் தடுப்பூசியை பெறுவது சிறந்தது - என்றார். (ஒ.44)

## சிறப்புச்சொற்பொழிவு

கொடிகாமம், பெப்.19

தென்மராட்சி வரணி மாசேரிப் பகுதியிலுள்ள குருநாதர் கோயில் வருடாந்த மஹோற்சவம் ஆலயப் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

தொடர்ந்து எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இந்த மஹோற்சவம் இடம்பெறவுள்ளது.

இதை முன்னிட்டு "சிவனடியார்களை சிந்திப்போம், வணக்குவோம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் இன்று "பெரிய புராணம் காட்டிய இல்வாழ்க்கை", நாளை "பெரிய புராணம் காட்டிய ஒழுக்க நெறி", நாளைமறுதினம் "பெரிய புராணம் காட்டிய சைவ சித்தாந்தம்", எதிர்வரும் 22 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய சிவனடியார்", 23 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய பெண்கள் உரிமை", 24 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய சிவ சின்ன மகிமை", 25 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய வாழ்வியல்", 26 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய சமய நெறி", 27 ஆம் திகதி "பெரிய புராணம் காட்டிய கலை மரபு" ஆகிய தலைப்புக்களில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

சிறப்புச் சொற்பொழிவின் இறுதிநாள் முடிவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ற)

## இலங்கையை பொறுப்புக்கூற வைக்க முனைப்புடன் செயற்படல் வேண்டும்!
### சர்வதேசத்திடம் கோருகின்றது மன்னிப்புச்சபை

கொழும்பு, பெப். 19

இலங்கை அரசாங்கத்தை முழுமையாகப் பொறுப்புக்கூறவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சர்வதேச சமூகம் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விமர்சனங்கள் மற்றும் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தல் மீது இலங்கை அரசாங்கத்தால் புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் சிவில் சமூகத்தின் சுதந்திரத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், போரின்போது சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இடம்பெற்ற குற்றங்களுக்கு நீதி வழங்கப்படுவதிலும் தடைகளைத் தோற்றுவித்துள்ளன.

நாட்டில் இடம்பெற்ற மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டத்தின்போது நடைபெற்ற குற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்போரை அடக்குவதற்கும், இடைக்கால நீதிப்பொறிமுறைகளைத் தடைசெய்வதற்குமான முயற்சிகளின்போது மனித உரிமை அமைப்புக்கள், ஊடகங்கள், சட்டத்தரணிகள், அரசியல் விமர்சகர்கள் உள்ளிட்ட தரப்பினர் இலங்கை அரசாங்கத்தால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். விமர்சனங்கள் மற்றும் மாற்றுக்கருத்துக்கள் ஆகியவற்றை முன்வைப்பதற்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு கருத்துச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை,ஆதாரங்களின்றி தன்னிச்சையாகத் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதிலிருந்து சுதந்திரம் பெறல் ஆகியவை உள்ளடங்கலாக சர்வதேச சட்டங்களின் கீழுள்ள கடப்பாடுகளுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்.

இம்மாதம் 22ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கூடும் போது, இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## நாடாளுமன்றுக்குள் இம்ரான்கான் வேண்டாம்
### சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர வேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரியுள்ளார்.

தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வெளிவிவகார அமைச்சிடம் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமரை நாடாளுமன்றத்துக்கு அழைப்பதாக இருந்தால், நாடாளுமன்ற ஊழியர்கள் அனைவரையும் அழைக்க வேண்டி ஏற்படும், தற்போதைய சூழ்நிலையில் அது பொருத்தம் இல்லை என்று சபாநாயகர் அதில் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதுடன், அவர் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இம்ரான்கானின் நாடாளுமன்ற உரை இரத்து செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ப)

## ஊசி ஏற்றிக்கொண்டாலும் தொற்று ஏற்பட வாய்ப்பு?

கொழும்பு, பெப்.19

கொரோனாத் தடுப்பூசி செலுத்தினால் கொவிட் தொற்று ஏற்படாது என்று கூறிவிட முடியாது என்று தெரிவித்துள்ள பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன, தடுப்பூசி ஏற்றி 3 வாரங்கள் வரை உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாது எனவும் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி பெற்றுக்கொண்ட சிலருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது. எனவே, தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரும் முறையாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் -என்றார். (ப)

# சிவப்புச் சீனி இறக்குமதிக்கு விரைவில் தடை வரலாம்?

**கொழும்பு,பெப்.19**

**சிவப்புச் சீனி இறக்குமதியை நிறுத்துவதற்கு சிறுதோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.**



இலங்கையில் வருடாந்தம் 6 இலட்சம் மெற்றிக் தொன் சீனிக்கான கேள்வி காணப்படுகிறது. அதில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் சிவப்புச் சீனி அடங்குகின்றது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்துள்ளார்.

சீனி இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் 40 பில்லியன் ரூபாவை குறைத்துக்கொள்ளும் நோக்கில் இறக்குமதியை தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)



## அருகிவரும் உயிரினங்களை பாதுகாக்க நடவடிக்கை

*விரைவில் வர்த்தமானி வருகிறது*

கொழும்பு, பெப். 19

இலங்கையில் கடந்த பத்து வருடங்களுக்குள் நீரிலும், நிலத்திலும் வாழக்கூடிய பெரும்பாலான உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுற்றுச் சூழல் அமைப்புகளின் பிரதிநிதிகள், சூழலியல் அறிஞர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஊடகவிய லாளர்களுடன் அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்துரையாடியுள்ளார்.

நீர் நிலைகளில் வளரும் தாவரங்களை அ ப்பதால் அவற்றில் தங்கி வாழும் உயிரினங் ள் அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள் ன எனவும் தெரிவிக்கப்பட்டது. குறித்த தாவரங் ள் மற்றும் ஆபத்தான விலங்கினங்களை காக்க காடழிப்பு அல்லது உயிரினங்களை பதை தடைசெய்யும் வர்த்தமானி அறிவித்த வெளியிடுமாறு இதன்போது அமைச்ச கோரிக்கை விடுக்கப்பட்டது.

அழியும் அபாய நிலையை எதிர்நோக்கிய தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் கு தகவல்களை தனக்கு வழங்குமாறு சுற்றுச் அமைப்புக்களிடம் அமைச்சர் கேட்டுக் கெ டார். பட்டியலைப் பெற்ற பின்னர், வர்த்த அறிவித்தலை வெளியிடுவதற்கும், ஆப எதிர்நோக்கியுள்ள தாவரங்கள் மற்றும் வி குகளைப் பாதுகாக்க தேவையான பாது நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயா க உள்ளோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ய-இ)

## பாகிஸ்தானுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில்

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பாகிஸ்தான் லாஹூர் பொருளாதார நிறுவனம் ஆகியவற்றுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

ஆராய்ச்சிப் பொருள்கள், வெளியீடுகள், தகவல் பரிமாற்றம் செய்தல், இரு நிறுவனங்களும் கூட்டாக தனிப்பட்ட ஆய்வுக் கருத்திட்டங்களை ஊக்குவித்தல், திறன்கள் மற்றும் இயலுமைகளுடன் கூடிய மாணவர் பரிமாற்று நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பாகிஸ்தான் லாஹூர் பொருளாதார நிறுவனம் என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது.

உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ய-இ)

## முகத்தை மூடும் தலைக்கவசம்; இனி சட்ட நடவடிக்கை இல்லை

கொழும்பு, பெப் 19

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், முழுமையாக முகத்தை மறைக்கும் வகையிலான பாதுகாப்பு தலைக் கவசத்தை அணியும் பட்சத்தில், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என, சட்டமா அதிபரால், பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த அறிவிப்பை கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்திருந்தார்.

சட்டமா அதிபர் தரப்பில், நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க, இந்த விடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெறுமாறு, சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் மன்றுக்கு அறிவித்தார். முழுமையாக முகத்தை மறைக்கும் வகையிலான பாதுகாப்பு தலைக்கவசத்தை அணிந்து பயணிக்கின்றமை குறித்து, வெல்லவாய பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ப)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### கடுமையான....

வரும் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நடக்கவுள்ளது.

தற்போது உருமாற்றம் பெற்ற கொவிட் 19 வைரஸ் தொற்று நாட்டில் தீவிரம் பெற்றுள்ள நிலையில், பட்டமளிப்பு விழா நடத்துவது தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் பட்டமளிப்பு விழா தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவால், ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும் கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர், கொவிட்19 தடுப்பு முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர் மருத்துவர் சுரேந்திரகுமார், பதிவாளர் வி.காண்டீபன், கல்வி வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள், அறிவுறுத்தல்கள் இறுக்கமாகப் பின்பற்றப்படும்.

இதன் பிரகாரம் பட்டம் பெற வருபவர்கள் மட்டும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். பட்டதாரிகள் அனைவரதும் வெப்பநிலை பரிசோதிக்கப்படுவதுடன், அவர்களின் கைகளும் சுத்திகரிப்புத் திரவத்தால் கழுவப்படும். தனியாள் இடைவெளி ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் ஆக இருக்கும் வகையில் அமர்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வுகளில் பங்குபற்ற வந்தவர்களோ, ஏனையவர்களோ உள்ளக விளையாட்டரங்குக்கு வெளிப்புறங்களில் ஒன்றுகூடுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. நிகழ்வு நடைபெறும் சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகளை அமைப்பதற்கு இந்தமுறை அனுமதி வழங்கப்படவில்லை. பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ள கொவிட்19 தடுப்பு, முகாமைத்துவக் குழு மேற்படி நடைமுறைகளை இறுக்கமாகவும், வினைத்திறனுடனும் மேற்கொள்ளத் தயாராக உள்ளது.

பட்டம் பெறும் மாணவர்கள் உள் நுழையும், வெளியேறும் பாதைகள் நன்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் பட்டதாரிகள் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள மருத்துவபீட பிரதான வாயிலுக்கு ஊடாக மட்டுமே உள்நுழைவதற்கு அனுமதிக்கப்படுவர். பட்டமளிப்பு அமர்வு முடிந்து வெளியேறுவோர் பல்கலைக்கழக மைதானத்தின் பிரதான வாயிலூடாக மட்டுமே வெளியேற அனுமதிக்கப்படுவர்.

ஆடியபாதம் வீதி, வளாக வீதி, தபால் பெட்டி வீதி மற்றும் மைதானத்தை அண்டிய பகுதிகளில் வாகனங்கள் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. வாகனங்களில் வருபவர்கள் வளாக ஒழுங்கையினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பல்கலைக்கழகப் பாதுகாப்பு அலுவலர்கள் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிப்பார்கள். பொலிஸ் அலுவலர்கள் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான செய்திகளையும், தகவல்களையும் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு ஊடாக வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்தமுறை பட்டமளிப்பு விழா நிகழ்நிலையாக இணையம் வாயிலாகவும், தொலைக்காட்சி ஊடாகவும் ஒளிபரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பல்கலைக்கழக கொவிட் 19 தடுப்பு, முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சு திரகுமாரன் தெரிவித்ததாவது-

உள்ளக அரங்கில் மாணவர்களை ள் வாங்கும்போது, சகலரையும் பதி கு உட்படுத்தி, அவர்களிடம் எதுவித ாய் அறிகுறியும் இல்லை என்பதை உ திப் படுத்திய பின்னரே அனுமதிக்க ள்ளோம்.

சுகாதாரப் பகுதியினர் அறிவித்தப ரே நேரத்தில் 150 பட்டதாரிகள் மட்டுமே ள் வாங்கப்படவுள்ளனர். அதற்க ய ஒவ்வொரு அமர்வும், மேலும் று அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்துக்கு ஒரு ப் பொறுப்பு உண்டு. அனைத்தையும் த் தில்கொண்டே நிகழ்வு திட்டமிடப் ள்ளது. யாழ். மாவட்ட செயலர் ம் வடக்கு மாகாண சுகாதார சே ள் பணிப்பாளர் ஆகியோர் எம்முடன் ர் புகொண்ட வண்ணமுள்ளனர். க ளின் அறிவுறுத்தல்களையும், த் தில் எடுத்துள்ளோம். மாற்றங்கள் டுமாயின் அதற்கேற்றவாறு பட் ு விழாவை நடத்துவதற்கு ஒழு ் மேற்கொள்ளப்படும் - என்றார்.

## இன்றைய நாள்

**மேஷம்:** தொழில் நிதானமாக நடக்கும். கடன் கட்டுக்குள் இருக்கும். உங்களின் புதிய முயற்சிகள் சாதகமான பலன் தரும். மனதுக்கு உகந்த விஷயங்கள் செய்யும் வாய்ப்பு வரும்.

**ரிஷபம்:** பொழுது போக்கான நிகழ்ச்சிகளில் கவனம் திரும்பும். பொறுப்பான விஷயத்தில் ஈடுபடுவீர்கள். பொறுமை காப்பீர்கள். குடும்பத்தினருடன் கோபமாகப் பேசுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** எல்லாவற்றிற்கும் பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். பழைய சோகங்களைக் கிளறுபவர்களைத் தவிர்க்க வேண்டும். பு சண்டை ஏற்படக்கூடிய சூழலை மாற்றி நிம்மதி அடைவீர்கள்.

**கடகம்:** அலைச்சலைச் சந்திக்க வேண்டிய நிலையை மாற்றுவீர்கள். நீங்கள் பயந்த விஷயங்களில் அந்த அளவு பாதிப்புகள் இருக்காது. பிள்ளைகள் பற்றிய கவலை தீரும்.

**சிம்மம்:** மனதில் உறுதியும், தைரியமும் அதிகரிக்கும். மன நிறைவு வரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதிர்ஷ்டத்தை மறுக்க வேண்டாம். மனஅழுத்தம் குறையும்.

**கன்னி:** நேற்றிருந்த நிலைமை மாறி, மனதில் நிம்மதி மீளும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. மற்றவர் தூற்றும் படியான செயல்களைச் செய்ய வேண்டாம்.

**துலாம்:** கோபத்தில் மனம்போனபடி பேசிவிட்டு வருந்த வேண்டாம். நியாயமான வழியில் வருமானம் ஈட்டும் வழியைக் கண்டறிவீர்கள். வேலை மாறுவது பற்றிய யோசனை வெற்றி பெறும்.

**விருச்சிகம்:** பெரியோருக்கு நன்மை செய்து அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். மற்றவர்களின் குற்றத்தைக் குத்திக்காட்டுவதில் பலன் இல்லை. குறிக்கோள்களை அடைய முயற்சி செய்வீர்கள்..

**தனுசு:** உறவினர் பலரை ஒரே நேரத்தில் சந்திக்க வாய்ப்பு வரும். உடற்பயிற்சியால் உடல் நலம் பேணும் ஆர்வம் அதிகரிக்கும். உங்களை நம்பிச் சொன்ன விஷயங்களை வெளியிட வேண்டாம்.

**மகரம்:** சகோதரர்களால் பணம் பற்றி சில சங்கடங்கள் ஏற்படும். வாழ்வில் உயர திடீர் வாய்ப்புகள் வந்து மகிழ்ச்சி தரும். உடல்நலனில் கவனமாக இருப்பதால் சிரமம் இருக்காது.

**கும்பம்:** ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றி வெற்றி தரும். பிள்ளைகளின் வாழ்வை நினைத்து மனஅழுத்தம் ஏற்பட்டு நீங்கும். நல்ல மாற்றம் ஒன்று நிகழ்ந்து சந்தோஷத்தைத் தரும்.

**மீனம்:** போதுமான பணம் இருப்பதால் செலவைச் சமாளிப்பீர்கள். மனஉறுதி காரணமாக சிரமம் வராதபடி காத்துக் கொள்வீர்கள். சிலரால் ஏற்படும் பிரச்னைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

# சச்சிதானந்தம்

நான் பரம்பொருளாக இருக்கிறேன்' என்று எந்தத் தருணத்திலும் இறைவன் தன்னைப் பெருமையாய் சொல்லிக் கொண்டதே இல்லை. ஒரு அடியாருக்காக, அந்த அடியார் தன்மேல் கொண்டிருக்கும் மாறா பக்திக்காக, அடியாருக்கு முன் தோன்றி லீலைகள் மேற்கொண்டார். அடியவருக்கு நேர்ந்த துன்பத்தைக் களைவதற்கு மட்டுமே தோன்றினார். லீலைகள் மேற்கொண்டார் லீலை செய்கிறாரே தவிர மற்றைய இந்த உலகத்துக்காக அற்புதங்களோ லீலைகளோ நிகழ்த்துவதே இல்லை இறைவன். அது ஏன்? சாதாரண மனிதர்கள் வழக்கமாக கேட்கும் கேள்வி இதுதான்.

அதாவது, ஏன் இப்படி அடியாரை துன்பத்துக்கு ஆட்படுத்த வேண்டும்?. பின்னர் லீலைகள் புரிந்து திருவிளையாடல் நிகழ்த்தி காட்சி தந்து ஆட்கொள்ளவேண்டும்? என்பதுதான் பக்தர்கள் பலரின் கேள்வி.

நாம் முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக 'பரம்பொருள்' தன்மை அதாவது 'இறைத்' தன்மை யானது 'சத்' என்றும் 'சித்' என்று சொல்லப்படுகின்ற 'பூரண அறிவு' என விளக்குகிறது சாஸ்திரம்.

இந்த 'சத்' தன்மையையும் 'சித்' தன்மையையும் ஒருவர் தனக்குள்ளே ஆழ்ந்து அனுபவிக்கும் தருணத்தில், உணரப்பட வேண்டியதே தவிர, அந்த இரண்டு வார்த்தைகளுக்கு தனித்து ஒரு அர்த்தமோ மற்றும் அவைகள் ஒரு காட்சிக்குள் அடங்குகின்ற பொருள்களோ அல்ல என்று சிவ புராணம் தெளிவுபடுத்துகிறது. மேலும் இரண்டு தன்மைகளும் தனித்தனியாகவும் கிடையாது. மகான்கள், ஞானியர்களின் அனுபூதி நிலையில் கண்டெடுக்கப்பட்ட மிக பவித்ரமான உண்மைகள் இவை!

இது மிக பிரத்தியேகமாக இறைவனுக்காகவே தன் உடல், மனம் மற்றும் ஆவியை அர்ப்பணித்து இறைவனுக்காகவே வாழ்பவர்களுக்கு இறைவன் அவர்களை தன்னுடன் சாயுஜ்யம் செய்துகொள்ள யுகங்களிலும் கர்மாக்களிலும் நிகழ்த்துகிற அற்புதம் இது என்று போற்றுகிறார்கள் சிவ பக்தர்கள். சக்தித்திரள்கள், அணு முதல் அண்டங்கள் அனைத்தையும் ஆளும் இறைவனுடைய சாம்ராஜ்யத்தில் காலதேச எல்லைகள் அதாவது வரையறைகளோ எல்லைகளோ இல்லை.




நாம் ஒரு இறை அடியாரைக் இனம் கண்டு கொள்கிறோமா? அருளும் லீலைகளுமாக அனவரதமும் இருக்கின்ற இறைவனின் இருப்பை நம் பௌதீக உடலுக்குள், காலதேச எல்லைகளுக்குள் மாட்டிக் கொள்ளாமல் புரிந்து கொள்கிறோமா? என்பது ஒரு தனி மனிதன் சதா தன்னை புடம் போட்டுக் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி என்கிறார்கள் சிவாச்சார்யர்கள்.

நம்முடைய சுவை உணரும் புலனான 'நாக்கு'க்கென்று ஒரு தனித்த சுவை உணர்ச்சி கிடையாது. நாக்கின்மேல் ஒரு சுவையான பதார்த்தம் வைக்கப்பட்டவுடன் எப்படி அந்தச் சுவை உணரப்படுகிறதோ அதேபோன்று 'சத்' தன்மை என்பது 'நாக்'கைப் போன்றது.

எந்தச் சுவை கொண்ட பதார்த்தமும் 'சித்' தன்மையைக் கொண்டது. நாக்கான 'சத்துடன்' சுவை கொண்ட பதார்த்தமான 'சித்' சேர்ந்தவுடன் சுவைத்தல் என்ற ஆனந்த அனுபவத்துக்கு ஆட்படுகிறோம். அப்படித்தான் இறைத்தன்மையையும் நாம் உணரவேண்டும்.

ஆகவே 'சத்' தன்மையும் 'சித்' தன்மையும் பிரிந்து இருக்கும் விஷயங்கள் இல்லை.

தனித்தனி விஷயங்களும் இல்லை. அவை எப்போதும் சேர்ந்தே உள்ளன. அந்தத் தன்மைகளை உணரும் தருணம் தான் ஆனந்தம்.

சத், சித் இணைந்திருப்பதை உணருவதே சச்சிதானந்தம். 'சத்சித்ஆனந்தம்' என்பது ஒன்று சேர்ந்த தன்மையாக துலங்குவதே 'பரம்பொருள்' நிலை.

'மெய்யிருப்பு, பூரண அறிவு, ஆனந்தம்' என்பது ஒரு நிலை. இதுவே பக்தி. இதுவே இறை. இதுவே ஆன்மிகம். இதை 'ஆதி அந்தம்' இல்லாத ஒரு அருட்பெருஞ்சோதி. இந்த நிலையை ஆரம்பம் முடிவு என்றெல்லாம் சொல்லுவது தன்னை ஒரு பௌதீக உடலாகவும் அதில் தனித்து அறிவு கொண்டு இயங்கும் ஒரு மனமாகவும் நினைக்கும் 'அகந்தையினுடைய' கருத்து என்று விளக்குகிறது சிவ புராணம். குணம் குறி மற்றும் நாமம் ரூபம் இவைகளால் ஆன இந்த பௌதீக பிரபஞ்சம் மெய்ப்பொருளிலேயே தோன்றி இருந்து மறைந்து கொண்டிருக்கின்றது. ■

## தவக்கால சிந்தனை

# உணவு ஒறுப்பு மட்டுமா நோன்பு?

நாம் முன்னெடுக்கும் செயல்களை எந்த நோக்கத்துக்காகப் புரிகிறோம் என்பதில் மனத்தெளிவு இருக்க வேண்டும். தவக்காலத்திலே நோன்பிருக்கின்றோம். நோன்பின் நோக்கமென்ன? அது எப்படி அமைய வேண்டும்?

நோன்பிருப்பதன் நோக்கம் மனமாற்றம். மாற்றத்தின் வெளியடையாளம்தான் நோன்பு. நாம் தவறிழைத்து விட்டோம். பாவங்கள் புரிந்துவிட்டோம். கடவுளை விட்டுப் பிரிந்து விட்டோம். இதுமுதல் பாவத்தை விட்டு விலகி இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது வழியில் பயணிப்போம் என்பதற்கு அடையாளம்தான் நோன்பு.

உண்ணாதிருப்பதும் தான தவ முயற்சிகள் செய்வதும் மனமாற்றத்தைக் கொண்டுவரவில்லையென்றால் அவை வெளிவேடச் செயல்களாகிவிடும். மனமாற்றம் இரக்கச் செயல்களில் வெளிப்பட வேண்டும்.

ஏழைகளுக்கு இரக்கம் காட்டுவதும் வறியவர்களோடும் துன்புறுவோருடனும் அன்பை, ஆறுதலை, அரவணைப்பை பணத்தைப் பகிர்ந்து கொள்வதும் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்காக குரல் கொடுப்பதும் ஆதரவுக் கரம் நீட்டுவதும் உண்மையான நோன்பாகும். இதுவே இறைவனுக்குப் பிடித்தமான சிறந்த நோன்பு.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை



# ஐ.நா.சபை இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைக்கத் தேவையில்லை

## எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி எச்சரிக்கை

கொழும்பு, பெப்.19


இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ஏதுவும் நடைபெறவில்லை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, இலங்கை விவகாரத்தில் அக்கறை கொள்ளாமல், சர்வதேச நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அக்கறை கொள்வது, தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் 30 வருட காலப் போர் அனைத்து இன மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பிறகே, தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர்க் கோட்பாடுகளுக்கு அமையவே, போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள், ஒரு தரப்பினரது கோரிக்கைக்கு அமைய போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கை குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து, சர்வதேச நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை குற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றார். (ப)

# கொரோனாத் தொற்று பரவலில் வீழ்ச்சி

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு



கொழும்பு, பெப்.19

உலகம் முழுவதையும் அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொற்று தற்போது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது என்று உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது,

சீனாவின் வுகான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் எனும் பெருந்தொற்று உலகம் முழுவதையும் ஓராண்டுக்கு மேலாக கடுமையாக பாதித்து வருகின்றது. லட்சக்கணக்கான மரணங்களையும் பல்வேறு பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தொற்று தற்போது படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. இதனால் உலக அளவில் புதிய பாதிப்புகள் குறைவடைந்துள்ளன.

கடந்த வாரம் 27 லட்சம் புதிய பாதிப்புகள் பதிவாகி இருக்கும் நிலையில், இது அதற்கு முந்திய வாரத்தை விட 16 சதவீதம் அதாவது சுமார் 5 இலட்சம் குறைவானதாகும். இதைப்போல கடந்த வாரம் 81 ஆயிரம் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதுவும் அதற்கு முந்திய வாரத்துடன் ஒப்பிடும்போது 10 சதவீதம் குறைவாகும்.

உலக சுகாதார அமைப்பின் 6 மண்டலங்களில் 5 இல் இரட்டை இலக்க சதவீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் மட்டும் 7 சதவீத அதிகரிப்புக் காணப்படுகின்றது. அதேநேரம் அனைத்து மண்டலங்களிலும் உயிரிழப்பு வீழ்ச்சியடைவது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# தொற்றால் இறந்த இளைஞனுக்கு 2 ஆவது பரிசோதனை தேவையல்ல

## மனுவைத் தள்ளுபடி செய்தது மேன்முறையீட்டு நீதிமன்று

கொழும்பு, பெப். 19

கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த இளைஞனுக்கு இரண்டாவது முறையாக பரிசோதனை செய்ய வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மனுதாரர் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அளித்த சமர்ப்பிப்புகளை கருத்தில் கொண்டு நீதியரசர்கள் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்னே கொரயா ஆகியோர் குறித்த மனுவை நிராகரித்தனர்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர், களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி உயிரிழந்தார். இதனையடுத்து, குறித்த இளைஞர் கொரோனாத் தொற்று காரணமாகவே உயிரிழந்தார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் வரை, சடலத்தை தகனம் செய்வதை தவிர்க்கும் வகையில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, உயிரிழந்த நபரின் தந்தையால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ப)

*ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல்;*

# கோத்தா அரசில் நம்பிக்கையிழந்து இறைவனிடம் நீதி கேட்டார் பேராயர்



**கொழும்பு, பெப்.19**

**ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் நாம் திருப்திப்படும் வகையில் இல்லை. அது தொடர்பில் நாம் இறைவனிடம் முறையிடுவோம். அவரது நீதிமன்றத்துக்குச் செல்வோம் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

திருநீற்றுப் புதன் சிறப்பு வழிபாடு நேற்றுமுன்தினம் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. திருப்பலியில் மறையுரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன, மத ரீதியில் மக்களைப் பிளவுபடுத்துவதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் என்றில்லாமல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். இந்த நாட்டைப் பாதுகாக்குமாறு நாம் அனைவரும் கடவுளிடம் மன்றாடுவோம். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே தவக்காலத்தை நாம் நிறைவு செய்து ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகும்போது இதே ஆலயத்தில் திருப்பலியில் கொடூரமான குண்டுத் தாக்குதல் மூலம் பலர் கொல்லப்பட்டனர். அது ஒரு திட்டமிடப்பட்ட சம்பவம். அந்த திட்டமிடப்பட்ட சம்பவம் தொடர்பில் நாம் நீதியைக் கோருகின்றோம். குற்றங்கள் மன்னிக்கப்படலாம். எனினும் குற்றங்கள் மறைக்கப்பட்டு விடக் கூடாது. சுயநல செயற்பாடுகளால் இந்த நாடு பின்னோக்கிச் செல்ல விடக்கூடாது. நூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது ஒரு தேசியப் பொறுப்பாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும். எமது தாய் நாட்டில் இன, மதங்களுக்கிடையில் பேதங்களை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டுச் சக்திகள் மேற்கொண்ட முயற்சியாகவும் இது இருக்கலாம். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது நாட்டைப் பாதுகாப்பதற்காக கடவுளிடம் மன்றாடுவோம். சர்வதேச சக்திகள் எமது நாட்டுக்குள் தலையிடுவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது - என்றார். (ப)

# புலம்பெரும் தமிழர்களே ஈழத்தைக் கோருகின்றனர்

## பூளோக இலங்கையர் பேரவை குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.19

"ஜெனிவா கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய யோசனையொன்றை முன்வைக்கவுள்ளன. இவையனைத்தும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் (டயஸ்போரா) தேவைகளுக்கு அமைவாகவே நடைபெறுகின்றன. அவர்கள் எமது நாட்டுக்குள்ளேயே ஈழத்தைக் கோருகின்றார்கள். அவ்வாறெனின் அவர்கள் முதலில் இலங்கைக்கு வந்து இந்நாட்டுக் குடியுரிமையைப் பெற்று, இங்குள்ள மக்களுடன் இணைந்து வாழ வேண்டும்" என்று பூகோள இலங்கையர் பேரவையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஷியாமேந்திர விக்கிரமராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலத்தில் புலம்பெயர்ந்து சர்வதேச நாடுகளில் வாழும் டயஸ்போரா அமைப்புக்களின் தேவைக்கேற்ப, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எமது நாட்டுக்கு எதிராகப் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனூடாக நாட்டில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் இடம்பெற்றன என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றே சர்வதேச சமூகம் கருதியது.

இந்நிலையில் இம்முறை நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையில் சில நாடுகளால் இலங்கை தொடர்பில் புதிய யோசனையொன்று முன்வைக்கப்படவுள்ளது. இவையும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தேவைக்கு அமைவாகவே நடைபெறுகின்றது - என்றார். (ஜ-இ)

# தொற்றிலிருந்து மீண்ட பெண் மூச்சுத்திணறி உயிரிழப்பு

கொழும்பு,பெப்.19

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்த பெண் ஒருவர், மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.


மஹியங்கனையில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண்ணுக்கு கடந்த 5 ஆம் திகதி கொரோனாத் தொற்று ஏற்பட்டு கிசிச்சை பெற்றுவந்தார்.

10 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் குணமடைந்த நிலையில் குறிப்பிட்ட பெண் வீட்டில் நான்கு நாள்கள் தனிமைப்படுத்தலை முன்னெடுத்துள்ளார்.

எனினும் சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து குறித்த பெண் பதுளை தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ஜ-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02
.
08
.
1951



மறைவு
02
.
03
.
2020

## அமரர் வீரவாகு சிவலிங்கம்


நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - அப்பா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

செருக்கப்புலம் லேன்,
கொக்குவில்

மனைவி, மகள்

# மரண அறிவித்தல்

தோற்றம்
03
-
10
-
1926



மறைவு
18
-
02
-
2021

## பொன்னம்பலம் முத்துப்பிள்ளை

புத்தூர் கிழக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் முத்துப்பிள்ளை நேற்று (18.02.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை லட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் செல்வமணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும் V. செல்லையா, A.செல்லையா ஆகியோரின் அன்பு மாமியாரும், பாஸ்கர், சுதாகர், கிருசாந்தன், கிருஷா, திவாகரன், வேணுகா, கோகுலதாஸ், தர்ஷா, சுகன்ஜா, வதனா, பிரதீஷன், யதுணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜிசாந், டிலக்ஷன், தைஸ்னி, பவீஷன், அதீஷன், அஸ்மீரா, தைஷான் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ந.ப 12.00 மணியளவில் புத்தூர் மேற்கு சுன்னாகம் வீதி, கிந்திட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்

தகவல்:
குடும்பத்தினர்

# அரசை காப்பதற்காக பரிஸில் போராட்டம்!

கொழும்பு, பெப்.19

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை இராணுவத்தின் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக்கூடாது என்று தெரிவித்து சிங்கள மக்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுமுன்தினம் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

30 ஆண்டுகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை விடுவிப்பதற்காக போராடிய வீரம் மிக்க இலங்கைப் போர் வீரர்களுக்கு எதிராக வெளிநாட்டு சார்பு புலிகள் பல தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என்று தெரிவித்து அவர்கள் போராட்டம் நடத்தினர்.

(எ-இ)

# மாகாண விவசாயத்திணைக்களம், வட மாகாணம்
# கால்நடைகள் ஏல விற்பனை

மாகாண விவசாயத்திணைக்களத்தின் கீழியங்கும் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணைகளிலுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கால்நடைகள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்களில் அவற்றுக்கெதிராக குறிப்பிட்டுள்ள திகதிகளில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

| மாவட்டம் | ஏல்விற்பனை இடம்பெறும் இடம் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி, நேரம் | கால்நடைகளைப் பார்வையிடும் திகதி, நேரம் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், வட்டக்கச்சி, கிளிநொச்சி | 01.03.2021, மு..ப.10.00 | 25.02.2021 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| மன்னார் | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், உயிலங்குளம், மன்னார் | 02.03.2021, மு.ப.10.00 | 01.03.2021 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| முல்லைத்தீவு | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு | 03.03.2021, மு.ப.10.00 | 02.03.2021 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| வவுனியா | அரச விதை உற்பத்திப்பண்ணை, வவுனியா | 04.03.2021, மு.ப.10.00 | 03.03.2021 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |
| யாழ்ப்பாணம் | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | 05.03.2021, மு.ப.10.00 | 04.03.2021 மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை |

கிளிநொச்சி மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம் - கால்நடைகள் விபரம்

| தொ.இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 4709/0002 | பசு | ஜேர்சி கலப்பு | 11 வருடம் |
| 2 | 4709/0004 | பசு | ஜேர்சி கலப்பு | 09 வருடம் |
| 3 | 4709/0009 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 05 வருடம் |
| 4 | 4709/0010 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 2½ வருடம் |
| 5 | 4709/0005 | பசு | ஜேர்சி சகிவால் கலப்பு | 10 வருடம் |
| 6 | 4709/0007 | பசு | ஜேர்சி சகிவால் கலப்பு | 06 வருடம் |
| 7 | 4709/0003 | பசு | ஜேர்சி சகிவால் கலப்பு | 03 வருடம் |

மன்னார் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம் - கால்நடைகள் விபரம்

| தொ.இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | MN/DATC/L3/02/C | நாம்பன் | உள்ளூர் | 02 வருடம் |
| 2 | MN/DATC/L3/03/C | பசு | ஜேர்சி கலப்பு | 14 வருடம் |
| 3 | MN/DATC/L3/06/C | பசு | ஜேர்சி சகிவால் கலப்பு | 03 வருடம் |
| 4 | MN/DATC/L3/07/C | நாம்பன் | உள்ளூர் | 2 வருடம் |
| 5 | MN/DATC/LS/02/G | கடா ஆடு | யமுனாபாரி கலப்பு | 2 வருடம் |
| 6 | MN/DATC/LS/15/G | கடா ஆடு | யமுனாபாரி கலப்பு | 1½ வருடம் |
| 7 | MN/DATC/LS/18/G | கடா ஆடு | யமுனாபாரி கலப்பு | 1 வருடம் |
| 8 | MN/DATC/LS/20/G | கடா ஆடு | யமுனாபாரி கலப்பு | 1 வருடம் |

முல்லைத்தீவு மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம் - கால்நடைகள் விபரம்

| தொ. இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 00003 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 4½ வருடம் |

வவுனியா அரச விதை உற்பத்திப்பண்ணை – கால்நடைகள் விபரம்

| தொ. இல | கால்நடை அடையாள இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 4309/0003 | பசு | ஜேர்சி கலப்பு | 04 வருடம் |
| 2 | 4309/0014 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 04 வருடம் |
| 3 | 4309/0016 | பசு | ஜேர்சி கலப்பு | 04 வருடம் |
| 4 | 4309/0017 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 03 வருடம் |
| 5 | 4309/0018 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 03 வருடம் |
| 6 | 4309/0020 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 2½ வருடம் |
| 7 | 4309/0021 | பசு | ஜேர்சி கலப்பு | 02 வருடம் |
| 8 | 4309/0023 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 01 வருடம் |
| 9 | 4309/0025 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 10 மாதம் |
| 10 | 4309/0026 | பசு | ஜேர்சி கலப்பு | 10 மாதம் |
| 11 | 4309/0027 | பசு | ஜேர்சி கலப்பு | 08 மாதம் |
| 12 | 4309/0028 | பசு | ஜேர்சி கலப்பு | 08 மாதம் |
| 13 | 4309/0001 | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 48 மாதம் |
| 14 | 4309/0002 | பெண் பன்றி | லார்ஜ் வைற் | 48 மாதம் |
| 15 | 4309/0003 | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 15 மாதம் |
| 16 | 4309/0004 | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 15 மாதம் |
| 17 | 4309/0005 | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 15 மாதம் |
| 18 | 4309/0006 | பெண் பன்றி | லார்ஜ் வைற் | 15 மாதம் |

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் - கால்நடைகள் விபரம்

| தொ. இல | கால்நடை இல | கால்நடை | இனம் | வயது |
|---|---|---|---|---|
| 1 | 4133 0540 0001 | பசு | ஜேர்சி கலப்பு | 13 வருடம் |
| 2 | 4133 0540 0009 | பசு | ஜேர்சி கலப்பு | 9 வருடம் |
| 3 | 4133 0540 0014<br>4133 0540 0032 | பசு நாம்பன் கன்றுடன் 1மாதம்) | ஜேர்சி கலப்பு | 5 வருடம் |
| 4 | 4133 0540 028 | பசு | ஜேர்சி கலப்பு | 1 வருடம் |
| 5 | 4133 0540 0031 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 6 மாதம் |
| 6 | 4133 0540 0029 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 1 வருடம் 2மாதம் |
| 7 | 4133 0540 0027 | நாம்பன் | ஜேர்சி கலப்பு | 1வருடம் 3 மாதம் |
| 8 | - | மறி ஆடு | யமுனாபாரி கலப்பு | 13 வருடம் |
| 9 | - | ஆண் பன்றி | லார்ஜ் வைற் | 06 வருடம் |
| 10 | - | பெண் பன்றி | லார்ஜ் வைற் | 03 வருடம் |

ஏலவிற்பனைகளில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் உரிய நேரத்தில் கால்நடைகளைப் பார்வையிட்டு குறித்த தினங்களில் ஏல விற்பனையில் பங்குபற்ற முடியும். ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால் நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடி யாகச் செலுத்தி அன்றைய தினமே கால் நடைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

மாகாண விவசாயப்பணிப்பாளர்

## கொள்வனவு

நெல் கொள்வனவு செய்யப்படும்.

077 634 1504, 077 104 1948

## தவறவிடப்பட்ட பொருள்

யாழ் நகரில் பெருமாள் கோவில் வீதி ஊடாக சென்ற போது புதிய நதியா நகை மாடம் எனும் பையினுள் இடப்பட்ட இரண்டு திறப்புகள் தவற விடப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 411 5392

# கட்சிகளை ஒடுக்கும் அரசின் போக்குக்கு அடிபணியோம்!

## சம்பிக்க எச்சரிக்கை

**கொழும்பு, பெப்.19**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளை ஒடுக்குவதற்கு முயற்சித்தால், பிரச்சினை சர்வதேச மயமாகிவிடும். இந்த அரசிடம் மண்டியிடுவதற்கு நாம் தயாரில்லை. முடிந்தால் ஜனநாயக வழியில் நேருக்கு நேர் மோதுங்கள் என்று ராஜபக்சக்களுக்கு சவால் விடுக்கின்றோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த ஜனவரி 15 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இன்னும் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. தகவல் அறியும் சட்டத்தின்கீழ் இந்த அறிக்கையை நபரொருவர் கோரியுள்ளார். 'அறிக்கை இன்னும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை' என அதற்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி 15 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக ஜனவரி 29 ஆம் திகதி விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை ஏப்ரலில்தான் வெளிவரும். ஆனால் முதலாவது குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதும் அது இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

அந்த அறிக்கையையும் ஏப்ரல் மாதத்தில் வெளியிடுவதற்கான திட்டம் அரசுக்கு இருக்கக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எமது சட்ட ரீதியான நடவடிக்கையை தடுப்பதற்கான அரசின் வியூகமாகக்கூட இது இருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஹெல உறுமய உள்ளிட்ட அரசியல் கட்சிகளை இறுக்கினால் பிரச்சினை சர்வதேச மயமாகிவிடும். இதனால் சர்வதேச பிடிக்குள் மேலும் நாடு இறுகக்கூடும்.-என்றோம்.(ஏ44)

## மணிவிழா வாழ்த்து

### திரு. துரைசிங்கம் செல்வராஜா

( B.A., (Dip.in.Edu.)

(ஆசிரிய ஆலோசகர், விவசாயம், தென்மராட்சி கல்வி வலயம்)



சம்பாவெளிப் பிள்ளையார்.
புதுக்குளத்து அம்பாள்,
வயற்கரை முருகன். அருட்கடாச்சம்
பெற்று ஓய்வு காலம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர்:**
**திரு.ஜெயராசா குடும்பம்**
**மகள் ஜெயபாரதி,**
**மருமகன் தவக்குமார்**

## கேள்வி அறிவித்தல்

### வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி.

01. **தலைவர், வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி** தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா(CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி (தொலைபேசி: 0242053196,)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2021.02.19 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **காலை 09.00 மணி** முதல் **மாலை 14.00 மணி** வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அலுவலகத்தில் **உள்ள மதிப்பீட்டினை பார்வையிட்டு அதன் பின்னர்** அதற்குரிய பூரணமான **ஆங்கில மொழியிலான** கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து **தலைவர், வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி** எனும் அலுவலகத்திலிருந்து 2021.02.19 ஆம் திகதியிலிருந்து 2021.03.04 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2000/ (வரிநீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி எ**னும் முகவரிக்கு 2021.03.05 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து **63 நாட்கள்** (அறுபத்து மூன்று நாட்கள்) 2021.05.07 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலைவிபரம் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| MPCS/2021/01 | Renovation of Nedunkerny Multipurpose cooperative society Building and construction of platform | 2 மாதம் | C7 or C8 | மதிப்பீட்டு தொகையின் 1% | 2021.06.04 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.02.26 **ம் திகதி** 14..30 மணிக்கு **வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெடுங்கேணி** தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம்,**
**நெடுங்கேணி,**
2021.02.18

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக
நூலகத்தில்
ஆழ்மன விருப்புடன்
நிறைவான பணியாற்றிய

### பொ.சந்திரபோஸ்

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பல்கலைக்கழக பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!**

**நூலகம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான**

**திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி)** தோற்றம்:-23.06.1974
**திருச்செல்வம் கம்சினி** தோற்றம்:-05.06.1996
**சிவலிங்கம் திருச்செல்வம்** தோற்றம்:-08.02.1972

மறைவு:-19.02.1997

ஆண்டுகள் இருபத்தி நான்கு வேகமுடன் கரைந்துபோய் விட்ட போதிலும் – இன்றும்
எம் மனங்களில் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கிறது
மீண்டும் உங்கள் வருகைக்காய் காத்திருந்து உங்கள் முகம் பார்க்க ஏங்குகின்றது
எமது உள்ளம்
அனைவரின் நெஞ்சங்களையும் கொள்ளை கொள்ளும் கள்ளமில்லாத உங்கள் அன்பு –இன்று
நினைத்தாலும் எமது விழியோரம் நீரைச் சிதறச் செய்கிறது....

சி.தேவகுஞ்சரம்,
கதிரிப்பாய், அச்சுவேலி.

என்றும் நினைவுடன்
அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார்,
அண்ணிமார், பிள்ளைகள்

## விபத்தில் ஆசிரியை உயிரிழப்பு

கொழும்பு, பெப். 19

வத்தளை நகரில் நேற்றுமுற்பகல் இடம் பெற்ற விபத்தில், பாடசாலை ஆசிரியை ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். சிலர் வெள்ளைக் கடவையின் ஊடாக பாதையைக் கடந்து சென்றதைத் தொடர்ந்து குறித்த ஆசிரியை, திடீரென பாதைக்கு குறுக்கே எதிர்பாராத விதமாக பயணிக்க முற்பட்டபோதே விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் தமிழ் பிரிவில் கற்பித்து வந்த ஜெ.சசிகலா (வயது - 48) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (த-இ)


## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-31

க.பொ.த (உ/த)- 2020 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ்
★ அடிப்படையிலிருந்து

★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து. பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5
● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
Duration : 6 Months
★ Certificate ★ UK, America, Canada.
● ICT வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்களுக்கானது
Grade 10,11,A/L ஆரம்பமாகின்றன

ஆரம்பம்
20.02.2021, 10.00 AM, 4PM

IPS
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229
076 685 2529


## மரண அறிவித்தல்



### திருமதி விக்னராஜா இராசலட்சுமி

யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.விக்னராஜா இராசலட்சுமி (முன்னாள் உப தபாலதிபர், இராமநாதபுரம், கிளிநொச்சி) நேற்று (18.02.2021) வியாழக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.
அன்னார் விக்னராஜாவின் ( முன்னாள் லிகிதர், கரைச்சி ப.நோ.கூ.சங்கம்) அன்பு மனைவியும், சுமதி ( ஜேர்மனி), தேவகி(கிளிநொச்சி) ,வாசுகி (லண்டன்), சங்கநிதி (ஜேர்மனி), பதுமநிதி (கொழும்பு ) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகன்மோகன், காலஞ்சென்ற உலகநாதன் மற்றும் புண்ணியமூர்த்தி, ரவிச்சந்திரன், நிக்ஸன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரின் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/4, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
44, 5/3, அரத்துசா லேன், வெள்ளவத்தை.

தகவல்:
பிள்ளைகள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### விபத்தில்....

கைச் சேர்ந்த பொன்னன் சந்திரபோஸ் (வயது-62) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 23ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வல்லைப் பகுதியில் மாடு குறுக்கே சென்றதால் இவர் விபத்துக்குள்ளானார். இவர் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
நேற்றுமுன்தினம் இரவு இவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகள் நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமாரால் மேற்கொள்ளப்பட்டன. (எ-26)

### ஈழத்துப்...

யிருப்புப் பிரதேச சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டுள்ளது.
கடந்த வாரம் நடந்த இந்த ஆண்டுக்கான சபையின் இரண்டாவது அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன் இது தொடர்பான தீர்மான வரைபை சபையில் முன்வைத்தார். பல்வேறு வாதப் பிரதிவாதங்களின் பின்னர், இந்தப் பிரேரணை சபையில் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது.
புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சுற்றுச்சூழல் வாழ்வசதி குழு, மாங்குளம் நகர்ப் பகுதியில் பிரேரணை கொண்டு வந்த உறுப்பினரால் அடையாளப்படுத்தப்பட்ட மூன்று இடங்களில் பொருத்தமான இடத்தை சிலை வைப்பதற்குத் தெரிவுசெய்யும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.(எ-இ)


## விற்பனைக்கு

3 கிழமை ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு (கழுத்து வெட்டியும்) உண்டு.

தொடர்பு: 077 477 5603


## மரண அறிவித்தல்

### இராஜேஸ்கண்ணன் வாமனன்



இமையாணன் கிழக்கு, தனகத் தோட்டத்தைச் சேர்ந்த செல்வன் இராஜேஸ்கண்ணன் வாமனன் அவர்கள் 17.02.2021 அன்று அமரத்துவமடைந்தார்.
அன்னார் இராஜேஸ்கண்ணன் (சிரேஸ்ட விரிவுரையாளர், சமூகவியற்துறை யாழ். பல்கலைக்கழகம்), சுனிதா (ஆசிரியர், யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) தம்பதியினரின் ஏக புதல்வனும், செல்வி சாத்வீகா (மாணவி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செல்வி ஸ்ருதிவந்தனா (மாணவி, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சாத்வீகப்பிரஸ்தம்"
இமையாணன்.
தொ.பே.இல : 0774374212
0773433994

தகவல்:
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
20 . 06 . 1957



ஆண்டவன் அடியில்
20 . 01 . 2021

### அமரர் தம்பிஐயா மோகனதாஸ் (அப்பு)

திதி: பூர்வபக்க ஸப்தமி

காலை வேளையிலே
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலன் நினைகொண்டு சென்று
திங்கள் ஒன்று வந்ததப்பா....
கனவா... என்று கண் விழித்தால்
நனவாகி விட்டது அப்பா .... எம்
உயிருள்ளவரை நின் நினைவே எம் நெஞ்சில்
நின் வரவுக்காய் காத்திருப்போம் அப்பாவே...

எமது தெய்வம் காலமான செய்திகேட்டு இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர், அனுதாபம் தெரிவித்தோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தோர், உடன் இருந்து உதவிக்கரம் செய்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாயிபோட்டோ,
1020, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்: 08.04.1937
மறைவு: 18.02.2021

### சின்னவன் கிருஷ்னன்

நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும் மண்டான் கரணவாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் கிருஷ்னன் அவர்கள் நேற்று (18.02.2021) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் செல்லி ஆகியோரின் மூத்த மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், அமரரான சிறிஸ்கந்தராசா மற்றும் நிதிஸ்கந்தராசா (சுவிஸ்), சிவசோதி, சண்முகசோதி (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மண்டான் பூவரசம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்டான்,
கரணவாய் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## 'பொ-பொ'...

அவர் பல மணிநேரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பேரணியில் பங்குகொண்ட மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அடிப்படையாகக்கொண்டே இந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வாகன இலக்கம், மோட்டார் வாகனத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டு, விவரங்கள் பெறப்பட்டு இந்தக் கைது நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இவர் கைது செய்யப்பட்ட தகவல் அறிந்த, தாயும், உறவினர்களும் பொலிஸ் நிலையம் முன்பாகக் கூடினர். இளைஞரை விடுவிக்க வேண்டும் என்று கோரி தாய் நீண்டநேரமாக கதறி அழுது கொண்டிருந்தார்.

பல மணி நேரம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், இளைஞரிடம் வாக்குமூலம் பதிவுசெய்த பின்னர் வீடு செல்ல அனுமதித்தனர்.

தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டுவரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் கடந்த 3 ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" என்னும் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், தன்னெழுச்சியாக மக்கள் திரண்ட போராட்டமாக இது அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியில் இணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை, வேணவாக்களை ஒருமித்த குரலில் உரத்து ஒலித்தனர்.

இந்தப் பேரணியில் பங்குகொண்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்திருந்தார். பேரணியில் பங்குகொண்டவர்கள் தொடர்பான ஒளிப்பதிவுகள் உள்ளன என்றும், வாகனங்களின் இலக்கங்கள் உள்ளன என்றும் தெரிவித்திருந்த அவர், அவற்றின் அடிப்படையில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். இந்தப் பேரணியில் பங்குகொண்ட ஒவ்வொருவரையும் சிறையில் அடைப்போம் என்று அவர் கூறியிருந்த நிலையில், இந்தப் பேரணியில் பங்குகொண்டிருந்த தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக பருத்தித்துறை, முல்லைத்தீவு, மன்னார் பொலிஸாரால் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

தற்போது பேரணியில் பங்குகொண்டமைக்காக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தப் பேரணியில் பங்கேற்றவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-26)

## தடையை....

வடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டிவரை மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறை இளைஞர் ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை வீடு செல்ல அனுமதித்தனர். அது தொடர்பாகக் கேட்டபோதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

பேரணி நடத்துவதற்கு சில இடங்களில் நீதிமன்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்த இடங்களில் நீதிமன்றத் தடையை மீறி நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டவர்கள் வயது வித்தியாசம், தகுதி வித்தியாசம் இன்றிக் கைதுசெய்யப்படுவார்கள். அவர்கள் மீது நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பருத்தித்துறையில் கைதுசெய்யப்பட்ட இளைஞரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும். அவர் வழக்கு விசாரணையை எதிர்கொள்வார். என்றார். (எ-22)

## 'பொ-பொ' மக்கள்...

உறுப்பினர் து.ரவிகரனிடம் மாங்குளம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். நேற்று ரவிகரனின் இல்லத்துக்குச் சென்ற பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். ரவிகரனிடம் ஏற்கனவே முல்லைத்தீவு பொலிஸாரும் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர சு.சுரேன், உபதவிசாளர் கஜன் மற்றும் உறுப்பினர்களான ரமேஷ், வீரவாகுதேவர் ஆகியோருக்குப் பளைப் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பாக வாக்குமூலம் வழங்க வருமாறு நேற்று நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதிக்கும் முருங்கன் பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நேற்று பிரதேச சபை உறுப்பினருக்கு நேரம் இன்மை காரணமாக அவர் இன்று, பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கவுள்ளார். (எ-214,56)

## பொலிஸாருடைய...

துள்ளது. அந்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிவயோகநாதம் தெரிவித்ததாவது:

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் விசாரணைக்கு அழைக்கின்றனர். அதனால் பல மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனக்கும் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளனர். பொதுமக்கள், மதகுருக்கள், கட்சி பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என அனைவர் மீதும் பல்வேறு குற்றங்களை சுமத்தி விசாரணைக்கு அழைக்கிறார்கள். இந்தச் செயற்பாடுகள் நாட்டில் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும். இந்தப் பேரணி வன்முறைகள் எதுவும் இன்றி மிக ஒழுக்கமாக, ஜனநாயக ரீதியில் இடம்பெற்றது. நாட்டின் பிரஜைகளாக நாமும் சுதந்திரமாக வாழ இந்த நாட்டில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் வழிசெய்ய வேண்டும். என்றார். (எ-இ)

## வீட்டுக்குள்...

தப்பிச் சென்ற கும்பலை விரட்டிச் சென்ற அந்தப் பகுதி இளைஞர்கள் அந்தக் கும்பலின் மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நவாலி அரசடியில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிள்களில் வந்த 5 பேர் கொண்ட கும்பலே அடாவடியில் ஈடுபட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளைஞர்களால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை, தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டைச் சேர்ந்த ஒருவர் வெளிநாட்டில் உள்ளவர் என்றும், அவருக்கு யாழ்ப்பாணத்தில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தார். (எ-20,26)

## பா.ஜ.க....

தன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை பாரதிய ஜனதா கட்சி என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் எண்ணம் இருக்கின்றது. இந்தியாவில் உள்ள கட்சிகளின் பெயரை இலங்கையில் பெயராக்கி கட்சி தொடங்குவது புதிய செய்தி அல்ல.

இந்தியாவின் விடுதலை இயக்கமான இந்திய தேசிய காங்கிரஸின் வெற்றிகரமான செயற்பாட்டைப் பார்த்து கொழும்பில் சிங்களவரும், தமிழரும் இணைந்து உருவாக்கியதே இலங்கை தேசிய காங்கிரஸ். இலங்கையின் வரலாறு இந்திய பண்பாட்டைத் தழுவியதாகவே உள்ளது. என்றார். (எ-இ)

## கடற்படை....

சுவீகரிக்கவுள்ளனர். இதற்காக நிலஅளவைப் பணிகள் இன்று காலை இடம்பெறவுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்த மக்களை அணிதிரளுமாறு 'பொத்துவில் முதல் பொலிகண்டி' போராட்ட மக்கள் பேரியக்கமும் தீவகச் சிவில் சமூகமும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

காரைநகரில் நீலங்காட்டுப் பகுதியில் கடற்படையினரால் இயக்கப்படும் உல்லாச சுற்றுலா விடுதி உள்ளது. இந்தச் சுற்றுலா விடுதியை மேலும் விரிவாக்குவதற்காகவும், கடற்படையினரின் நிரந்தர முகாம் அமைப்பதற்காகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த 62 குடும்பங்களுக்கு உரித்தான 50 ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து வைத்துள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலேயே இவை உள்ளன.

அடாத்தாக ஆக்கிரமித்துள்ள காணிகளை அரசுடைமையாக்குவதற்காக நில அளவைப் பணிகள் இன்று காலை மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும், வர்த்தகப் பெறுமதியான இந்தக் காணிகளை ஆக்கிரமிப்பாளர்களான கடற்படையினரிடமிருந்து மீட்பதற்கும் பொது மக்கள் அணிதிரள வேண்டும்.

'பொத்துவில் முதல் பொலிகண்டி' பேரணி, மக்களின் திரட்சியாலேயே மாபெரும் வெற்றியைப் பெற்றது. காணி அளவீட்டை நிறுத்தி அதனை மீட்பதற்கும் மக்கள் படையெடுக்க வேண்டும். காரைநகரில் அண்மையில் நடைபெற்ற காணி சுவீகரிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் குறைந்தளவான மக்களே பங்கேற்றிருந்தனர். இந்த நிலையில் இன்றைய போராட்டத்திலும் அவ்வாறானதொரு நிலை வராது அதிகளவான மக்கள் பங்கேற்க வேண்டும், என்று மக்கள் பேரியக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளரும், தீவகச் சிவில் சமூக அமைப்பின் பொருளாளருமாகிய கருணாகரன் குணாளன் கேட்டுக்கொண்டார். (ஒ.5)

## அரசு....

ளும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

2022ஆம் ஆண்டு ஆரம்பமாகும் போது அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாத அளவுக்குப் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். அதனால் தற்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கக்கூடாது. தற்போதைய அரசு ஆட்சியை சில காலங்களுக்குக் கொண்டுசெல்ல விடவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளில் இருக்கும் தனக்கு நெருக்கமானவர்களுக்கு அரசியல் ஆலோசனை வழங்கும் போதே ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## திருமணமாகி...

பெற்றது. மிருசுவில் வடக்கு எழுதுமட்டுவாழைச் சேர்ந்தவரும், தற்போது குடமியனில் வசிப்பவருமான கமலநாதன் கௌசல்யா (வயது-24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிமன்று பொலிஸாருக்குப் பணித்தது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9,159)

## சலூன்....

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 291 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 426 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் மன்னாரில் சிகை அலங்கரிப்பு நடத்துபவர். அந்த சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு அண்மைய நாள்களில் சென்றவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். (எ-26)

# 16.25 கோடி ரூபாவுக்கு

## ராஜஸ்தானில் மொறிஸ்

சென்னை, பெப். 19
ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் சென்னையில் நேற்று நடைபெற்றது. அதிகபட்சமாக கிறிஸ் மொறிஸை 16.25 கோடி ரூபாவுக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது.
மிகவும் குறுகிய அடிப்படையில் இந்த ஏலம் நடைபெற்றது. எனினும் ஒவ்வொரு அணிகளுக்கும் வெளிநாட்டு வீரர்களின் வெற்றிடங்களைப் பலப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. தென்னாபிரிக்க வீரரான கிறிஸ் மொறிஸை வாங்குவதற்காக ராஜஸ்தான் மற்றும் பெங்களூர் அணிகளுக்கு இடையில் கடும் போட்டி இருந்தது. இறுதியில் 16.25 கோடி ரூபா கொடுத்து ராஜஸ்தான் வாங்கியது.
கடந்த வருடம் 10 கோடி ரூபா கொடுத்து மொறிஸை பெங்களூர் அணி வாங்கியிருந்தது. ஆனால் அவர் இந்த வருடம் விடுவிக்கப்பட்டிருந்தார். விடுவிக்கப்பட்ட பின்னர் இந்த வருடமும் மொறிஸைத் தக்கவைக்க பெங்களூர் முயற்சிகளை எடுத்தது. கிட்டத்தட்ட 10 கோடி ரூபா வரை வழங்குவதற்கு பெங்களூர் தயாராகவே இருந்தது. ஆனால் ராஜஸ்தான் பெரும் தொகையைக் கொடுத்து தனதாக்கியது.
ஆஸ்திரேலிய வீரர் மக்ஸ்வெல் 14.25



கோடி ரூபாவுக்கு பெங்களூர் அணியால் வாங்கப்பட்டார். பெங்களூருடன் சென்னை சுப்பர் கிங்ஸ் போட்டியிட்டபோதிலும் இறுதியில் பெருந்தொகையைக் கொடுத்துப் பெற்றது ஆர்.சி.பி.
சிமித் 2.20 கோடி ரூபாவுக்கு டெல்லி அணியாலும், மொயின் அலி 7 கோடி ரூபாவுக்கு சென்னை அணியாலும், சகிப் அல் ஹசன் 3.20 கோடி ரூபாவுக்கு கொல்கத்தா அணியாலும், மலன் 1.5 கோடி ரூபாவுக்கு பஞ்சாப் அணியாலும் வாங்கப்பட்டனர். (ம)

## நோர்த் கொங்கியூரஸ் அசத்தலான வெற்றி!

யாழ்ப்பாணம், பெப். 19
ஜி.பி.சி.எல் கிண்ணத்துக்கான தொடரில் அண்மையில் ஆட்ட மொன்றில் அக்கிரசிவ் போய்ஸ் அணியினரை வீழ்த்தியது நோர்த் கொங்கியூரஸ் அணி.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அக்கிரசிவ் போய்ஸ் அணியினர் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்து 19.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக வினோத் 34 ஓட்டங்களையும், டிலோசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக ஜீவபிரசாத் மற்றும் நொபேட் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோர்த் கொங்கியூரஸ் அணியினர் 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரமே இழந்து வெற்றிபெற்றனர். நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக அதிகபட்சமாக அநுரதன் 45 ஓட்டங்களையும் கிசாந்துஜன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் அக்கிரசிவ் போய்ஸ் அணி சார்பாக அதிகபட்சமாக லிங்கநாதன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் பிளே ஓப் செல்லும் வாய்ப்பை கைப்பற்றியது நோர்த் கொங்கியூரஸ் அணி.
ஆட்டநாயகனாக நோர்த் கொங்கியூரஸ் அணியின் அனுரதன் தெரிவானார். (ம-320)




## வேங்கைகளை வீழ்த்தியது ஜப்னா றோயல்ஸ் அணி!

யாழ்ப்பாணம், பெப். 19
ஞானம்ஸ் பெயின்ற் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் வடமராட்சி வேங்கைகள் அணியை வீழ்த்தியது ஜப்னா றோயல்ஸ் அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா றோயல்ஸ் அணி துடுப்பாட்டத்தைத் தீர்மானித்து 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கௌதமன் 34 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வடமராட்சி வேங்கைகள் அணி சார்பாக அதிகபட்சமாக சேந்திரன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி வேங்கைகள் அணியினர் 19.3 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
வடமராட்சி வேங்கைகள் அணி சார்பாக அதிகபட்சமாக அனுரதன் ஒனாசியஸ் 33 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஜப்னா றோயல்ஸ் அணி சார்பாக அதிகபட்சமாக வாமணன் 4 இலக்குகளையும் பிரசன்னா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்.
போட்டியில் தோல்வியடைந்தாலும் வடமராட்சி வேங்கைகள் அணி நெட் ரன் ரேட் காரணமாக பிளேஓப் செல்லும் வாய்ப்பை பெற்றுக் கொண்டது. ஜப்னா றோயல்ஸ் அணி குழுவில் முதலாவதாக பிளேஓப் சுற்றுக்குத் தெரிவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.
ஆட்டநாயகனாக ஜப்னா றோயல்ஸ் அணியின் உபதலைவர் வாமணன் தெரிவானார். (ம-320)

**கடை வாடகைக்கு தேவை**
திருநெல்வேலி சந்தைப் பகுதியில் கடை ஒன்று வாடகைக்கு தேவை
தொடர்பு: 077 725 7515

**ஈ-சன்ஸ்**
மரணச்சடங்குகளுக்கு மலர் வளையங்கள், மாலைகள் கொண்டு வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 021 222 2695, 076 5846523

**வேலை வாய்ப்பு**
❖ வரவேற்பாளர் - பெண்
❖ பகுதி நேர விரிவுரையாளர் - ஆண் பெண் ( ஆங்கிலம் , சிங்களம் கணினி , IT )
❖ கணினி வடிவமைப்பாளர் - ஆண் பெண்
❖ பாடநெறி இணைப்பாளர் - பெண்
❖ சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - ஆண் .
❖ சுத்திகரிப்பாளர் - பெண்
மேற்குறித்த பதவிகளுக்கு தகுதி உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை abcedu171@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
AUSTRALIAN BUSINESS CAMPUS
No. 160 2nd Cross Street ,
Jaffna. T.P : 021 4366676

**வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி**
தங்களின் நீண்ட பயணங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி!!!
"யாழ்.பற் சிகிச்சை" நிலையத்தின் ஓர் அங்கமான
ஆரோக்கியா
AAROKYA DENTAL CARE
தற்போது உங்களுக்கு மிக அருகாமையில் பெற்றோல் செட் ஒழுங்கை நெல்லியடி இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நவீன முறையிலான பற்சேவையை பெற்றிட இன்றே விரைந்திடுங்கள்
தொடர்புகளுக்கு:-074 070 2241, 075 9759 828

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 07 - 12 - 1938
மறைவு 22 - 02 - 2018
**அமரர் சின்னத்தம்பி ஜெயராஜா**
(ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்)
என்றென்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எமதருமை அப்பாவே. நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள் உருண்டோடி மறைந்தனவோ?
எம் உயர்வுக்கு வழிகாட்டிய அப்பாவே உங்கள் ஆத்மா சாந்தி பெற மல்வம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளின் திருப்பாதங்களைத் தினமும் வணங்குகின்றோம்.
"தெய்வநிழல்" மல்வம், உடுவில்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.